24 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

"NAM NADU" Official Organ of teh D. M. K.

மலர்-2 | திருவள்ளுவர் ஆண்டு 2010 மாசி – 27 | இதழ் 25
11—3—1979



தி. மு. க. ஒரு வீணை!

திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு நல்ல வீணை; அதில் நாதம் குறையும பொழுது, அவ்வப்போது அதன் நரம்புகளை, விசைகளைச் சரிபார்த்துக் கொள்வதைப்போன்றதே இது! அறுந்து விடும் என்று யாராவது கருதுவார்களானல், அந்த நரம்பின் வலுவையும், அந்த வீணை ஆக்கப்பட்ட விதத்தையும், அது எழுப்பும் இசையையும் நுகர முடியாதவர்களென்று பொருள் —அண்ணா



தி. மு. க. வார ஏடு

விலை 50 காசு

அவன் கவிஞன்; பொன்னும் மணியும் மின்னும் வைரமும் பூட்டி மகிழ்வான் தமிழ்த் தாய்க்கு! தந்தத்தால் ஆன கட்டிலிலே சந்தனத் தொட்டிலிலே தமிழ்க் குழவியைச் சீராட்டிப் பாராட்டுவான். கண்ணே! முத்தே! தமிழ்ப் பண்ணே' என்றெல்லாம் கவிதைக் காதலியோடு கொஞ்சுவான். அவன் புகழ் குன்றின் மேல ஜோதியாயிற்று.

எழுத்தின் வேந்தர் என்றனர் அவனை. கருத்தின் செல்வன் எனக் கவி பாடினர் மக்கள்.

பழுத்த அனுபவம் கொழுத்த சொற்கள். இவைகளை வைத்துக்கொண்டு அவன் தமிழுலகில் நிமிர்ந்து நின்றான்.

ஏடுகள்...அவன் எழுத்துக் கோவை இல்லாவிட்டால் இனிக்காது!

நாடகம்... அவன் பாடல் ஒலிக்காவிட்டால் சோபிக்காது!

திரைஉலகம்...அவன் கீதங்கள் முழங்காவிடில் சுவைக்காது! இப்படி வளர்ந்தான் அவன்.

ஏழைகளை ஊக்குவிப்பான்; கோழைகளை வீரராக்குவான்!

"தாழையின் முள்ளும் வாழையின் குருத்தும் சேருமோ?" எனக் கேட்டுத் "தமிழர் பண்பும் ஆரியர் கலையும் ஒட்டாது; கிழிந்து விடும்" என்பதற்கு விளக்கம் தருவான். அவனைப் பாராட்டிப் பலர் எழுதினர்.



"கவிஞனே! கலைவாணனே கருத்துச் செல்வமே! கண்டேன் உமது கவிதையை, விதவைத் துயர் பற்றி வேதனை நிரம்பிய கீதம் அமைத்தீரே; அதுகண்டு விழியிலே நீர் பெருக்கினேன், இத்தகைய பெருமை மிகுந்த உம்முடன் இருந்து பணி செய்ய விழைகிறேன். விருப்பம் நிறைவேறுமா? விடுத்திடுவாய் பதில், இங்ஙனம் வில்லவன்,

—இப்படி ஒரு மடல்!

"ஏட்டிலே பாட்டு கண்டேன்; எழுத்தின் வித்தகனே! என் இதயங் கவர்ந்தவனே! ஏழை நான். எனக்கோர் உதவி செய்வாயோ? கவிதை எழுதுவதில் அடியேன், திறமையுடையவன். என கவிதைத் தொகுப்புக்களைப் புத்தகமாக்கும் பணியை மேற்கொள்வாயேல் என் ஆசை நிறைவேறும்; உடன் பதில் தருவாய் காத்திருப்பேன் இப்படிக்கு இன்மொழியன்.

—இப்படி ஒரு முடங்கல் வரும்!

"கடல்மடை திறந்தாற் போல் கருத்து மழைபொழியும் கவிஞர் ஏறே! கடையேன் கண்ணப்பனின் கண்ணீரைத் துடைப்பீர்! எனக்குக் கவிதை எழுதப் பல நாட்களாய்ப் பேரவா, அந்த எண்ணத்தை ஈடேற்றுவீராக!"

—இப்படி ஒரு கடிதம்!

"நாடகத்தில் உமதுசொற்றிறன் போற்றற்குரியது. கதாநாயகனும் கதாநாயகியும் பாத்திரத்தால் உயர்வு பெற்றதைவிட உமது பாட்டால் அதிகம் மதிப்புப் பெற்றனர். உம்து பாட்டை இசைக்கும் பெரும் வாய்ப்புஎனக்குக்கிட்டுமோ; உம்நாடகமேடை எனக்கு எட்டுமோ? தர்பார் காட்சியில் சாமரம் ஏந்தினாலும் சகி

உமது பாட்டொலிக்கும் அரங்கில் அரிதாரம் பூசி நின்றேன் அடியேன் என்ற புகழ் வந்தால் போதும்; புண்ணியனே! கண்ணியனே! புலியே! சிங்கமே! புனிதனே! பொற்புடன் எனக்கோர் புதுப்பணி தருவீர்! வணக்கம். வணங்காமுடி''

—இப்படி ஒரு தாள்!

'திரையுலக ஜோதியே! ஆதியே! நீதியே வீதியே கதியென்று கிடக்கும் இந்தவிணன் கலையுலகில் காலெடுத்து வைக்கக் கனவு காண்கிறான். கடலில் செல்லக் கட்டுமரம் வேண்டுமென்பார்கள். காசாசைக்காக அல்ல; கலையுலகத்துப் பணி புரிய. அதுவும் உன் கவிதைகளைப் பாடித் தொண்டாற்ற—தோழனே தொல்லைப்படும் நான் எல்லையில்லா ஆவல் கொள்கிறேன் துணை புரிவாய்! இங்ஙனம் தூயமணி''

—இப்படி ஓர் அஞ்சல்!

''ஏழைகளைப் பற்றி எழுதும் என் அய்யனே! என் கதை சோகம் நிறைந்தது; எனக்கோர் வழி காட்டு!''

'நாடகத்தில் ஒருவேடம்''

''திரையுலகில் ஒரு காட்சி''

''நீ எழுதும் ஏட்டினிலே ஒரு வாய்ப்பு''

''பணமல்ல எனக்குத் தேவை! பணி புரிவேன் கலைத்துறைக்கு''

'உன் பாடலை என் வாயால் பாடவேண்டும்''

''சரியென்று சொல்; இல்லையேல் என் சாவை ஏற்றுக்கொள்''

'பல முடங்கல் எழுதினேன்—பதிலில்லையே ஏன்?

''வேலையில்லை என எழுதிவிட்டேர்; வேதனை தாங்கவில்லை'

''நாடகமேடை''

''திரை உலகம்''

''பத்திரிகை அலுவலகம்!!

ஆயிரக் கணக்கிலே அவன் புகழ் பாடிக் கடிதங்கள் குவிந்தன. புகழ் பாடும் கடிதங்கள் எல்லாம் அவன் உதவியை நாடி நின்றன.

அவன்வளர்ச்சிக்கு அளவே இல்லை. வளர்ந்தான்; வளர்ந்தான், வளர்ந்து கொண்டே போனான்

ஒருநாள் திடீரென அவன் இல்லத்தில் ஒப்பாரி கேட்டது அலறல் வந்தது கேட்டு அனைவரும் ஓடினர். ஊரே திரண்டு ஓடியது! அவன் இறந்து விட்டான், இறவாப் புகழ் பெற்ற



அந்தக் கவிஞன் இறந்து விட்டான். அதுவும் தற்கொலை செய்துகொண்டு இறந்து விட்டான். கோழைகளை வீரராக்கிடப் பாடிய அந்தக் கோமான் இறந்துவிட்டான் தற்கொலை செய்துகொண்டான், தமிழ்த் தாய்க்குச் சிலம்பு பூட்டிச் சிங்கார அணிகள் சூட்டி மகிழ்ந்தவன் உத்திரத்திலே தொங்கிக் கொண்டிருந்தது அந்த உத்தமனின் பிணம்!

ஊர் கேட்டது ''ஏன் வலுவில் உயிர்விட்டான்?''என்று.

உலகமே வியந்தது! ஒரு குறைவுமில்லாதவன் உயிர் விட்டுக்கொள்ள யாது காரணமென அறியாமல்! அவனோ நிம்மதியாகத் தொங்கிக் கொண்டிருந்தான். போலீசார் வந்தனர். பிரேதத்தைப் பரிசோதித்தனர். கவிஞனின் சட்டைப்பையிலே ஒரு காகிதத் துணுக்கைக் கண்டனர். அதில் அவன் எழுதியிருந்தான்:

என்சாவுக்குக் காரணம்; என் காலடியில் உள்ள பெட்டிதான்'' என்று!

போலீசார் பெட்டியைத் திறந்து பார்த்தனர்; பொது மக்களும் ஆவலோடு கவனித்தனர். பெட்டி திறக்கப்பட்டது. அதில் ஆயிரக்கணக்கான சிபாரிசுக் கடிதங்கள இருந்தன.

''எனக்கு வேலை கொடு''

''நான் பாடுவேன், திரையுலகில் வாய்ப்பு வேண்டும்''

—என்பது போல!

இப்போது புரிந்துவிட்டது எல்லோருக்கும். அவன் ஏன் செத்துக்காட்டினான் என்று!



விவசாயிகள் எழுச்சி

விவசாயிகள் மரபுவழி அமைதியானவர்கள்; இயல்புவழி அடக்கமானவர்கள். போராட்டம், புரட்சி, கிளர்ச்சி ஆகியவைகளில் அவர்களுக்கு ஆர்வமும் ஈடுபாடும் குறைவு. மிகமிகக் குறைவு. உடைமை உணர்வு ஒற்றுமைக் குறைவு, படிப்பறிவின்மை இவைகள் எல்லாம் அவர்களை போராட்டத்தின் பக்கமே போகவிடுவதில்லை. புரட்சிக்கு இலக்கணம் வகுத்த மார்க்ஸ கூட 'புரட்சிக்குத் தலைமை ஏற்கும் தகுதி தொழிலாளர்களுக்குத்தான் உண்டு. அவர்கள் விவசாயிகளை சேர்த்து இணைத்துக கொள்ளவேண்டும், என்றே வழி காட்டினன்.

அப்படிப்பட்ட விவசாயிகள் இன்று போர்க்கோலம் பூண்டுவிட்டார்கள். அடங்கி ஒடுங்கிக்கிடப்பவர்கள் சீறிச்சினந்து எழுந்துவிட்டார்கள். ஊமையாய் வாய்மூடிக் கிடந்தவர்கள் இன்று சிங்கமாய் கர்ஜிக்கிறார்கள். இந்த நிலை ஏன் வந்தது? எப்படி வந்தது? ஆழ்ந்து ஆய்ந்து பார்த்திடவேண்டும் ஆட்சியாளர்கள். அலட்சியப் படுத்திய காலம் கடந்துவிட்டது. ஆத்திரப்படும் நிலைக்கு வந்துவிட்டிருக்கிறார்கள் ஆட்சியாளர்கள் இன்று.

ஆனால் ஆத்திரப்படுவதற்குப் பதிலாக, அறைகூவல் விடுப்பதற்குப் பதிலாக ஆழ்ந்து எண்ணிப் பார்க்கவேண்டும் அவர்கள்.

"வரி கொடுக்கமாட்டோம் என்று கூறுவதா? அப்படிக் கூறுபவர்களை நாங்கள் விட்டுவைக்க மாட்டோம்!" என்று, சட்டப் பேரவையில் சங்கநாதம் முழங்கியுள்ளார் தமிழக முதலமைச்சர் எம். ஜி. ஆர்.

"'வரி கொடுக்கும் வசதி எங்களுக்கு இருக்கிறது என்றாலும் நாங்கள் கொடுக்கமாட்டோம்! நீங்கள் என்ன செய்துவிட முடியும் எங்களை? கூட்டுறவுக் கடன்களை திரும்பிச் செலுத்தும் சக்தி எங்களுக்கு இருக்கிறது. ஆனாலும் செலுத்த மாட்டோம். உங்களால் ஆனதைப் பாருங்கள்" என்று ஆட்சியாளர்களுக்கு அறைகூவல் விடுக்கவில்லை விவசாயிகள். 'பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும் என்பதைப்போல் எங்களுக்கு அடிமேல் அடிவிழுந்து கொண்டிருக்கிறது. வறட்சி—விளைவில்லை. புயலால் வளர்ந்த பயிர் அழிந்துவிட்டது. வெள்ளம் பயிரை அழித்துவிட்டது. நோய் பயிர்களை நாசமாக்கிவிட்டது. தொடர்ந்து கடந்த நான்காண்டுகளாய் நாங்கள் பாதிக்கப்பட்டு வருகிறோம். போட்ட விதை, உரம் பூச்சி மருந்தெல்லாம் பாழாகிவிட்டன. போட்ட மூலதனம் அழிந்துவிட்டது. இன்று நாங்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறோம். தாங்க முடியாத வரிச்சுமை, கடன் பளு. 'மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம் உண்டி கொடுத்து உயிர் கொடுக்கும்' எங்கள் உயிரைக்காப்பாற்றுங்கள். ஆட்சியாளர்களே எங்களைக் காப்பாற்றுங்கள்; எங்கள் வரிச்சுமையை, கடன்பளுவை நீக்குங்கள்" என்று ஆட்சியாளர்களைப் பார்த்து தமிழக உழவர்கள் கெஞ்சுகிறார்களே தவிர வஞ்சினம் கூறவில்லை. தாங்க முடியாத துன்பத்தால் கதறுகிற உழவர்களின் உண்மை நிலையை முதலமைச்சர் உணராது கோபாவேசம் கொண்டு 'விட்டேனா பார்' என்று கொக்கரிக்கிறார்.



பிஞ்சுக்குழந்தை பசி தாங்காது கைகால்களை அசைந்து உதறக் கொண்டு அழும். அதைக்கேட்டவுடனே தாய் பரிவோடு குழந்தையைவாரிஎடுத்துப் பால் புகட்டுவாள். அரசும் அவதிப்படும் மக்களை தாயினும் சாலப் பரிந்து பாதுகாக்கக் கடமைப்பட்டது.

'ஏன் கத்துகிறாய்? அறைவேன்' கையையா ஓங்கிக் காட்டுகிறாய்? உதைப்பேன் காலையா தூக்குகிறாய்? என்று கூறி பசியால் துடிதுடிக்கும் குழந்தையை வசை பாடி கை வலிக்கும்வரை அடிப்பவள் தாயாக இருக்கமாட்டாள். பேயாகத்தான் இருப்பாள். வரிச்சுமையும் கடன் பளுவும் தாங்காது எங்களைக் காப்பாற்றுங்கள் எங்கள் வரிகளை கடன்களை ரத்து செய்யுங்கள் என்று முறையிட்டு மன்றாடும் விவசாயிகளை வரி "கொடுக்கமாட்டீர்களா? உங்களை விட்டு வைக்கமாட்டோம்" என்று ஆர்ப்பரிப்பதும் அவர்கள் மீது அடக்குமுறையை ஏவ ஆலோசிப்பதும் சனநாயக அரசின் செயலாக இருக்க முடியாது, சர்வாதிகார அரசின் நடவடிக்கையாகவே கவே இருக்க முடியும்.

முதலமைச்சர் எம். ஜி. ஆர். அடிப்படை நியாயங்களை உணர மறுக்கிறார். எப்படியாவது விவ

(தொடர்ச்சி 9-ம் பக்கம்)

எம்.ஜி

அமைச்சர் வீரப்பனின் அறிவுக்கொழுந்து!

இலட்சக் கணக்கில் சம்பாதிக்கும் கலைஞர்களுக்கு ஆயிரக் கணக்கில் அரசுப் பணத்தை உதவித் தொகையாகக் கொடுப்பது ஊதாரித்தனம்; அதிகார துஷ்பிரயோகம் என்றுதான் நானும் சில உறுப்பினர்களும் மேலவையில் கண்டித்தோம்.

●●●●●●●●●●●●●

து. மா.
பால சுப்பிரமணியம்
எம். எல். சி.

●●●●●●●●●●●●●

பெற்றவர்கள் திரைப்பட வர்த்தகக் கழக விழாவிலேதான் மறுப்புரைக்க வேண்டுமா?

''கலைஞர்களுக்கு உதவிப்பணம் தருவதை, சட்டமன்றத்திலே மேலவையிலே கண்டிக்கிறார்கள்! அதைப் பற்றி நீங்கள் யாரும இதுவரையில் ஒருவார்த்தை கூட சொல்லவில்

நேருக்கு நேர் பேச நெஞ்சுறுதி இல்லையா?

''இலட்சக்கணக்கில் வருமான வரி செலுத்திய அந்தக் கலைஞர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் தருவதுகூட ஒரு தவறா? எனக் கேள்வி எழுப்பியிருககிறார் அமைச்சர் வீரப்பன்

அதாவது, இலட்சக்கணக்கில் வருமான வரியே செலுத்துமளவுக்கு, கோடிக்கணக்கில் [கருப்பு தவிர, வெள்ளையில் மட்டும்] அந்தக் கலைஞர்கள் சம்பாதிக்கிறார்கள் என்பதை அமைச்சர் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்!

கோடிக்கணக்கானவர்கள் குடல் நிரப்பவே திண்டாடுகின்ற நம் நாட்டிலே கோடிக்கணக்கில் சம்பாதிப்பவர்களுக்கு இந்த 'உதவித் தொகை' தேவைதானா என்பதை அமைச்சர் சிந்திக்கவே இல்லை!

அந்தக் கலைஞர்களிடம் வருமான வரியை வாங்குவது மத்திய அரசு! அவர்களுக்கு ''உதவித் தொகை'' வழங்குவதோ மாநில அரசு! இந்த முரண்பாடும் வீரப்பனுக்கு விளங்கவில்லை!

அதிக வரி செலுத்துவோருக்கு அரசு உதவிப் பணம் தருவது முறையெனறால், அந்த நியதி கலைஞர்களுக்கு மட்டுந்தானா! ஆலை முதலாளிகளும், பெருவணிகர்களும் தொழிலதிபர்களும், நிலப்பிரபுக்களும் கோடிக்கணக்கில் வரி செலுத்தவில்லையா? இலட்சக்கணக்கில்வரி செலுத்துவோருக்கு மட்டும் ஆயிரம் ரூபாய் உதவிப்பணம் தருவதென்றால் கோடிக்கணக்கில் வரி செலுத்துவோருக்கும் இலட்சக்கணக்கில் உதவிப் பணம் வழங்க வேண்டுமல்லவா?

அப்படி வழங்குவதையும் 'உதவிப் பணம் என்று கூறாமல், ஊக்க ஊதியம்' அல்லது 'அதிக வரி போனஸ்'' என்று பெயர் மாற்ற வேண்டுமல்லவா?

சட்டமன்றத்திலேகண்டித்துப்பேசிய உறுப்பினர்களுக்கு சட்டமன்றத்திலேயே அமைச்சரும் மறுப்புரையோ விளக்கமோ கூறுவதுதான் ஒழுங்குமுறையாகும்.

அப்படி அரசவையிலேயே அமைச்சர் மறுப்புக் கூறியிருந்தால், நாங்களும் அங்கேயே தந்த பதிலடிகளைக் கொடுத்திருக்க முடியும்!

சட்டமன்றத்திற்குள்வந்து பேசுவதற்கு உரிமையும் வாய்ப்பும் இல்லாதவர்கள்தான், வெளியிலேபேசித்தீரவேண்டும். அமைச்சர்வரிசையிலே அமர்ந்திருப்பவருங்கூட அப்படிப் போய் வெளியிலே பேச வேண்டிய காரணம் என்ன? நேருக்குநேர் பேச நெஞ்சுறுதி இல்லையா

கும்பகோணத்திலே குட்டுப் பட்டவர்கள் அறந்தாங்கியிலே போய்த்தான் அழ வேண்டுமா?

சட்டமன்றத்திலேகண்டிக்கப்

லையே! ஏன் என்று கூடக் கேட்க வில்லையே!'' என்று பேசியிருக்கிறார் அமைச்சர் வீரப்பன். அதாவது 'இனியேனும் சட்ட மன்ற உறுப்பினர்களைக் கண்டித்துப் பேசுங்கள்!" என்னும் கருத்தில், மறைமுகமாகத் திரைப்படக் கலைஞர்களையும், நடிகர் சங்கத்தையும் தூண்டிவிட்டு உற்சாகப் படுத்தியிருக்கிறார்!

ஏற்கனவே "பொது மக்களே பார்த்துக் கொள்வார்கள்!'' என்ற பாணியில் தூண்டி விட்டார்கள்! பிறகு 'வெண்ணிறப் படை' யொன்றைத் தூண்டி விட்டார்கள்! இப்போது கலைஞர்களையும் தூண்டி விடுகிறார்கள்!

சட்டமன்றத்துக்குள்ளே எந்தக் கருத்தையும் வெளியிட அதன் உறுப்பினர்களுக்கு முழு உரிமையுண்டு! அதே மன்றத்துக்குள் அமைச்சர்களும், தவறான கருத்துக்களை மறுக்கலாம்—அவைக் குறிப்பிலிருந்து நீக்கவும் செய்யலாம்,

அமைச்சர்களே, வெளியார்களை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகத் தூண்டுவது உரிமை மீறல் குற்றமல்லவா? சட்டமன்ற உறுப்பினர்கள் தமது கடமையைச் செய்ய இயலாதவாறு தடுக்கின்ற குற்றமல்லவா? இத்தகைய குற்றங்களை அமைச்சர் வீரப்பன் செய்திருப்பது அறியாமையா? அறிந்தே செய்யும் ஆணவமா?

✶★

சாய்பாபாவின் சாயம் வெளுக்கிறது!

நாங்கள்தான் இவ்வுலகில்கடவுளுடைய உண்மையானபிரதிநிதிகள் என்று ஏராளமானவர்கள் உரிமை கொண்டாடும்போது அவர்களுக்குள் தகராறு வருவதைத் தடுக்க முடியாது. இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் அசைக்க முடியாத நம்பிக்கையுள்ள சீடர்களைக் கொண்டிருக்கும் இரண்டு மனிதக் கடவுள்களும், ஒருவருக்கொருவர் நேரடித் தாக்குதலுக்குத் தயாராகிவிட்டனர். சத்திய சாய்பாபாவைப் பற்றி பகவான் ரஜ்னீஷ் சொல்லியவைகள். அவர்களுடைய சீடர்களுக்கு சாய்பாபாவுடைய தெய்வீக சக்தியின் மேல் சந்தேகத்தை உண்டாக்கவில்லையானாலும் அந்த உரிமையைக் கொண்டாடும் அளவுகோலில் சிறிதாவது குறையும்.

புனே பகவான் 'ரஜனீஷ் செய்திக் கடிதம்' என்ற தாளில் அவர் சாய்பாபாவின் சீடர்களின் தனிப்பட்ட அனுபவங்களைப் படித்ததிலிருந்து "சாய்பாபா அவர் இனத்தைச் சேர்ந்த ஆண்களைப் புணர்வது மட்டுமில்லாமல் அவரிடம் ஆண் குணாதிசயமும், பெண் குணாதிசயமும் சேர்ந்து உள்ளது' என்று கூறியுள்ளார். உடற் கூற்றைப் பற்றி மேலும் ரஜ்னீஷ் ஆராய்ச்சி செய்யும்போது, மண் புழுவிற்கு ஆண் குறியும் பெண் குறியும் இருப்பதில் தவறொன்றும் இல்லை என்கிறார். ஆனால் அதுபோன்று சாய்பாபாவிற்கு இருப்பது தான் தகராறு. அவர் நடக்கும் தன்மையைப் பார்த்தால் அவர்கள் சீடர்கள் சொல்லுவது சரிதான்.

இது அதிசயமாக நடக்கிறது. இதில் கண்டிப்பதற்கு ஒன்றுமில்லை; இதைப்பற்றி சத்திய சாய்பாபா என்ன செய்ய முடியும்? சத்திய சாய்பாபா மற்றவர்களைவிட உண்மையிலேயே பெரும் செல்வந்தர். அதற்குக் காரணம் அவர் இரு வழிகளிலும் காதலை அனுபவிக்கலாம். ஒன்று ஒரு ஆணாக; மற்றொன்று ஒரு பெண்ணாக.

ஒரு மனிதக் கடவுள் பாதி ஆண், பாதி பெண்; (சிவன் கூட அர்த்தநாரியாகக் காட்சி அளித்தார்) தன் இனத்தைச் சேர்ந்தவரையே புணர்தல் ஆகியவைகள் வெறுப்பையோ கேலியையோ, அவமானத்தையோ உண்டாக்குமா என்பது பற்றி எனக்குத்தெரியாது. மேலே சொன்னவைகள் பொது நலத்தைக் கருதி வெளியிடப்பட்டன என்று ஆதரவு தேடி வாதாடுவார்களா என்பது பற்றியும் தெரியாது. சிறிது காலத்திற்கு முன்னாள் சற்றேறக்குறைய இதுபோன்ற குற்றச்சாட்டை ஆனந்த மார்க்கத்தைத்தோற்றுவித்த ஆனந்தமூர்த்தி எனும் பி. ஆர். சர்க்கார் மீது சட்டப்படியான அவரது மனைவி சாட்டினார் சர்க்காரோ. அவரது எண்ணற்ற சீடர்களோ திருமதி சர்க்கார் மீதுகோர்ட் நடவடிக்கைஎடுக்கவில்லை சாய்பாபாவின் எண்ணற்ற சீடர்களில் யாராவது ரஜ்னீஷ் மீது வழக்குப்போடுவார்களா என்பது தெரியாது ஆனால் டாக்டர் கோவூர் மட்டும் உயிருடன் இருந்திருந்தால் இரண்டு பேரும் தோல்வியடைவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

—குஷ்வந்த் சிங்

(11–2–79)

(சண்டே ஆங்கில வாரஇதழில் எழுதியது)

சிம்கோவும் சிலம்ப மந்திரியும்!

மகன்: சிம்கோ தொழிலாளர் பிரச்சினை குறித்து சரித்திரம் காணாத 'புயல்' சட்டசபையில் அடித்தபோது அதற்குப் பதில் அளிக்க வேண்டிய தொழிலாளர் நல அமைச்சர் ராகவானந்தம், ரொம்ப நேரம் கழித்துத் தான் சபைக்கு வந்தாராமே... உண்மையா அப்பா?

தந்தை: ஆம்; உண்மைதான் மகனே.

மகன்: அதைவிட அவருக்கு வேறு முக்கியமான வேலை இருந்திருக்குமோ?

தந்தை: ஒருவேளை எங்காவது சிலம்பாட்டம் ஆடப்போயிருக்கலாம் மகனே...

மகன்: அப்படி நேரம் கழித்து வந்த பிறகும், சிம்கோ தொழிலாளர் பிரச்சினை குறித்து வாயே திறக்கவில்லையாமே?

தந்தை: ஆம்; மகனே.

மகன்: என்னப்பா காரணம்?

தந்தை: சிலம்பாட்டம் ஆடிய களைப்பில் அவர் ஓய்வெடுத்திருக்கலாம் மகனே...

★★★

ஐந்தாண்டுக்குள் ...

"இன்னும் ஐந்தாண்டுக்குள் பல்கலைக் கழகங்களில் இந்தி பாடமொழியாகும்"

- துணைவேந்தர்கள்

அப்படியானால்; ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளாகவே கல்வித் திட்டம் பாழடைந்துவிடும்"

'சூர்யா'

ஆங்கில மாத இதழ்.

கண்ணீர் சிந்தும் கறுப்பு அங்கிகள்!

ஒருவன், கையில்லாதவன் துணையோடு — கண்ணில்லாத காலிழந்தவன் உதவியால் நள்ளிருளில் — திருடனைப் பிடிக்கப் புறப்பட்டான என்றால் அவன் எந்த நிலைக்கு ஆளாவானோ அந்த நிலைதான் இன்றைய ஆட்சியல் நீதியை — நேர்மையைத்தேடிப் போகும் ஒருவனுக்குக் கிடைக்கும் பரிசாக இருக்கிறது.

ஆம்! நீதியை — நேர்மையை சட்டம் தரும பாதுகாப்பை — இழந்த நிலையில்தமிழக மக்கள் உள்ளார்கள் —

வழக்கறிஞர்களுக்கென்று ஒரு 'சங்கம்' உண்டு . தன் நடவடிக்கைகள் ஊதிய உயர்வோ, போனசோ சலுகையோ கேட்பதல்வ, மாறாக 'மரியாதை' 'கவுரவம்' குறையாமல் பாதுகாக்கும் பணியேயாகும்.

வேறு யாருக்கும் இல்லாத உரிமைகள் 'இக்கறுப்பு அங்கிக்கு' உண்டு. இந்த அங்கி அணிபவர்கள் — தங்களை நம்பி வந்தவர்கள் கூறும் எந்தச் செய்தியையும் வெளியே சொல்ல யாராலும் கட்டுபபடுத்த முடியாது!

இவர்கள் கருத்துக்களை கருத்தடை செய்யமுடியாது! இவர்களைத் தடுத்து நிறுத்திட வாதத்தை — மிரட்டிப் பறத்திட எந்தவிதப் 'புரட்சி'யாலும் முடியாது.

எந்த ஆட்சியிலும் இல்லாத அவமானம் கறுப்பு அங்கிக்கு இன்று நேர்ந்திருக்கிறது!

இது குறித்து ஆளுகின்றகட்சியின் நோக்கம் என்ன என்பதை ஆராய்வதைவிட மங்கலநாணை இழந்த நீதிதேவதையை எண்ணும்போதுஇவர்களின்செயலின் புரட்சியை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது

காக்கிச் சட்டை, கறுப்பு அங்கியை வம்புக்கிழுத்திருக்கிறது! இந்நாட்டில் 'காக்கிச் சட்டைகள்' ஆள்கின்ற கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களால் தாக்கப்படும்போது காட்டாத வீரத்தை நீதிக்காகவாதிடும் கறுப்பு அங்கிக்காரர்கள் மீது காட்டுவதேன்?

குடிப்பவனைப் பிடிக்க மூன்று பெரிய அதிகாரிகள் செல்வதும் — கொலைகாரனைப் பிடிக்க யாருமே போகாததும இந்நாட்டு சர்க்காரின் வாடிக்கை! நியாயம் கேட்பவனை நடுத்தெருவில் உதைப்பதும் கண்கூடான உண்மைகள்!

தொழிலாளர்கள் — மாணவர்கள் மீனவர்கள் — மற்றவர்கள் ஏன் எழுந்தறிவித்த 'இறைவனே' தாக்குதலுக்கு ஆளாகும்போது — பாவம் வழக்கறிஞர்கள்தானே என்று கருதியிருக்கக்கூடும்.

இதன் விளைவாக — 'கறுப்பு அங்கிகள்' 'இனி ஒரு விதி செய்வோம்' 'காக்கிச் சட்டைகள்'எனில் கட்டாயம் வாதாட மறுத்திடுவோம்' என முடிவெடுத்துள்ளனர்.

அடிதடிகள், அன்றாட சினிமாக்கள், காதல் காட்சிகள் கருத்தில்லாப் பேச்சுகள் இவைகளையே கேட்டுப் கேட்டுப் பழகியவர்களின் ஆட்சியில் - இந்த மரியாதை எதிர்பார்கக முடியாத ஒன்றுதான். வாதாடும் மன்றத்தில் உள்ளவர்களைப் பற்றி — வன்முறைக் கும்பலுக்குத் தெரிய வழி என்ன?

கி முருகானந்தம்
பி. ஏ. (பி. எல்)

சிவில் வழக்கு சம்பந்தமாக சென்றவர்க்கே இந்தக்கதி என்றால் குற்றம் சம்பந்தப்பட்டவர்கள் கதை என்ன ஆவது! அதுமட்டுமல்ல; காவல் நிலையத்தில் எந்தத் தகவலையும் பெறஉரிமை பெற்றவர்களுக்கே இந்த கதி!

விவசாயிகள் உடையின்றி ஊர்வலம் — பொறியியல் வல்லுநர்கள் மொட்டை அடித்து ஊர்வலம் — ஆசிரியர்கள் அவமானத்துக்குள்ளாகும் நிலை — கிணத்துக்கடவு — பல்லாவரக் காவல்நிலையவன்முறை சம்பவங்கள் — 'காக்கிச் சட்டைகளின் கதறல்கள்' எனவே இந்த ஆட்சியில் வன்முறைச் சம்பவங்கள் வாடிக்கை என்றாலும் —

'பாதுகாப்பு'ப் பெற்ற சிறப்புரிமைகள் — பெற்றவர்களுக்கே இந்த நிலைமை

அவர்கள் எடுத்த தீர்மானப்படி இனிக் காவல்துறை சம்பந்தமான வழக்குகளை - வழக்கறிஞர் இல்லாமல் அவர்களே வாதாடுவார்களா?

இல்லை. 'கிணத்துக்கடவு' தான் சரி என்பார்களா?; நீதிபதியே ஒரு

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

ஏய்ப்போ ஏய்ப்பு!

"குதிரைப் பந்தயத்தில் வரி ஏய்ப்பைத் தடுக்க அரசு கடும் நடவடிக்கை எடுக்கும்." —

சட்டப்பேரவையில்
அமைச்சர் சோமசுந்தரம்

"குதிரைப் பந்தயமே மக்களை ஏய்க்கும் சூதாட்டம். இதில் வரி ஏய்த்தால் என்னவாம்!"

(ஒரு குதிரைப் பந்தய டிக்கட் விற்கும் ஏஜென்சி)

கறுப்பு அங்கி மீது பாயும் காக்கிச் சட்டைகள்:

7-ம் பக்கத் தொடர்ச்சி]

முறைசுற்றுலாப் பயணிகள் விடுதியில் தங்கி இருந்தபோது — திடீரென வந்த அமைச்சர் - வருகையையொட்டி அவசரமாகவும் — விரைவாகவும் அறையிலிருந்து வெளியேற்றப்பட்டு — நள்ளிரவில் — நடுத்தெருவில் அலையவிடப்பட்டார்.

ஆம்! அச்சம்பவம் தொடர்ந்தது:

இன்னொரு சம்பவம் — அய்யாத்துரை என்கிற ஆளும்கட்சி வழக்கறிஞர் — திருடபரங்குன்றக் காவல் நிலையத்தில் காட்டுத்தனமாக தாக்கப்பட்டிருக்கிறார்.

இதையொட்டி நமது கழகப் பொருளாளர் சாதிக்பாட்சா சட்டமன்றத்தில் குறிப்பிட்டு 'இது — நீதிமன்ற அவமதிப்புக்குள்ளாகும் குற்றம் — நீதி விசாரணை வேண்டும்' என்று பேசியுள்ளார்.

கலைஞர் ஆட்சியில் ஏதாவது ஒரு நாய் செத்தால்கூட வெளி மாநில நீதிபதியைக் கொண்டு நீதி விசாரணை கேட்டவர் இன்றைய முதல்வர். அவர் இது பற்றி இன்னமும் வாய் திறக்கவில்லை! திறக்காததே மேல் எனக் கருதவேண்டும், திறந்தால் 'பொதுமக்கள் பார்த்துக் கொள்வார்கள்' என்பார்.

சாதிக்கைத் தொடர்ந்து, ஜனதா ஜேம்ஸ், மார்க்சிஸ்ட் உமாநாத். இ. காங்கிரஸ் மாரிமுத்து ஆகியோர் மிகக் கடுமையாகக் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

எல்லா நீதிமன்றங்களும் ஒரு நாள் இயங்கவில்லை — வாங்கால வழக்கறிஞர்கள் பயிலும் சட்டக் கல்லூரி இயங்கவில்லை! இல்வளவுக்கும் பின்னால் இத்தனை ஆர்ப்பாட்டப் போர்ப் பரணிக்கும்பின்னால் திருப்பரங்குன்றம் மட்டுமா? இல்லை! இல்லை! விருகம்பாக்கம் காவல் நிலையத்தில் இரத்தினாகரன் என்ற வழக்கறிஞர் தாக்கப்பட்டிருக்கிறார்.

இதுவே கலைஞர் ஆட்சியில் நடந்திருந்தால் — எம். ஜி. ஆர். - சட்டமன்றத்துக்கு வராமல் சட்டமன்றம் செத்துவிட்டது என்று சொன்னதுபோல நீதிமன்றம் செத்துவிட்டது என்பார்! விசாரணை தேவை என்பார் கவர்னர், ஜனாதிபதி ஆகியோரிடம் மனு கொடுப்பார்

ஆனால் இன்று உத்திரவிடும் நிலையில் உள்ள அவர் — 'வழக்கறிஞர்கள் அனைவரும் இரும்புக் கவசம் அணியவேண்டும் என்பார்! அதன் காரணத்தைக் காலம்வரும் போது சொல்வேன் என்பார்!

இனிமேல் காவல் நிலையங்களுக்கு வழக்கறிஞர்கள் செல்லக் கூடாது என்பார்! ஏனெனில் விபத்துவரும் என்பதற்காக.

விமானப் பயணத்தையே தவிர்த்திட்டவர் அல்லவா? சொந்தக் காரைக்கூட வழக்கறிஞர்கள் ஒட்டக்கூடாது என்று சொன்னவர் அல்லவா?

இதன் பின்னணியைப் பாருங்கள் — அரசு என்பது நிர்வாகம் சட்டமன்றம் நீதிமன்றம் ஆகிய மூன்று பிரிவுகளின் மூலக்கருத்தில் அடங்கிய முழுப் பொருளாகும்.

இது விண்ணில் உள்ள கோள்கள்போல ஒன்றை ஒன்று தொடாமல் ஆனால், தொடர்ந்து, மோகாமல் ஆனால் ஒட்டிவிலகாமல் ஆனால் சற்றே பிரிந்து செயல்படவேண்டும்.

சட்டமன்றம் வகுக்கும்சட்டங்களை நிர்வகிக்கும் அதிகார வர்க்கம் — நெறி தவறாது நியாயம் தவறாது இயற்கை நெறிமுறை ஒட்டி நடைபோட வைக்கிற ஒரு சக்திதான் நீதித்துறை — அதிலேயும்,

கறுப்பு அங்கியின் மீதா கை வைப்பது? — நீதி தேவதையை மறந்து விட்டவர்கள் ஆட்சியில் இது அன்றாட நடவடிக்கைதான் என்றாலும் —

இது சாதாரண புண் அல்ல! புரையோடியபுண் ஆம்! இதுவே இரத்தத்தை மாற்றிட வைக்கும் சம்பவமாகட்டும்!

இதற்கு நாம் நம்மையே அர்ப்பணிக்கத் தயாராவோம்! கவி தாகூர் சொன்னதுபோல — 'எவன் அச்சமின்றி உள்ளானோ அவனே பாரத தேசத்தில் நீதியை நிலை நாட்ட முடியும் என்றார்!

ஆம்! நீதி தலை வணங்கிவிட்டது. 'நீதிக்குத் தலைவணங்கு' என்று திரையிலே வசனம் பேசிய நடிகர் எம். ஜி. ஆர் நீதியை நிலை நிறுத்த வாதாடும் வழக்கறிஞர்களைக் காவல் துறையினரைக் கொண்டு கடுமையாகத் தாக்கலாமா?

★

இலவச நடிப்பும்-கறுப்பு வியாபாரமும்

"சினிமாவில் இலவசமாக நடிக்கப்போவதாக முதல்வர் எம். ஜி. ஆர். அறிவித்திருக்கிறார்" — செய்தி.

"எங்களிடம் நல்லகதை இருக்கிறது. அதை நாங்கள் சினிமாவாக எடுத்தால் அதில் இலவசமாக நடிக்க எம். ஜி. ஆர். சம்மதிப்பாரா?

ஜனதா உறுப்பினர் சாமிதாஸ் — சட்ட மன்றத்தில்.

"வெள்ளையில் வியாபாரம் இல்லை. இனிமேல், கறுப்பில்தான் வியாபாரம் நடத்தப்போகிறார் எங்கள் வாத்தியார். அப்பாவிஎம்.எல்.ஏ.வுக்கு அதுகூட தெரியவில்லையே"

— எம். ஜி. ஆர். ரசிகன்

சுயமரியாதை சுடரொளிக்கு வீரவணக்கம்

இம்மாதம் 16—ஆம் நாள் அன்னை மணியம்மையாரின் நினைவு நாள்.

அன்னையாரின் நினைவு நாளை 'சுயமரியாதைச் சுடரொளி' நாளாக ஒவ்வொரு ஊரிலும் கொண்டாடுமாறு திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் திரு. கி. வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

"தந்தை பெரியார் அவர்களுடன் இயக்கத்தின் ஆரம்ப காலத்திலிருந்து தோளோடு தோள் நின்று பாடுபட்ட சுயமரியாதை வீரர்கள், வீராங்கனைகள் அத்துணைபேர்களது (அவர்கள் உள்ளூர்க்காரர்களாக இருப்பினும்கூட) தொண்டுக்கு வீர வணக்கம் செய்து. அவர்களைப்போல இன்றைய இயக்கத்தின் இளைய, புதிய தலைமுறையினரும் உறுதி பூண்டு சுயநலம் இன்றி உழைக்க வேண்டும் என்று சூளுரை எடுத்துக் கொள்ளவேண்டும்'' என்று திரு. வீரமணி தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தச் சுயமரியாதைச் 'சுடரொளிகள்' பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் அடங்கிய கையேடு ஒன்று ஐயா நூற்றாண்டு நிறைவு விழாவின்போது சிறப்புடன் வர இருக்கிறது என்பதையும் அவர் தெரிவித்துள்ளார்.

அன்னை மணியம்மையாரை நினைவு கூரும் அதே நாளில் சுயமரியாதைத் சுடரொளிகளுக்கும் நமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

— (ஆ—ர்)

விவசாயிகள் எழுச்சி..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சாயிகள் போராட்டத்தை நசுக்கிடவே ண்ணுகிறார். "சிறு விவசாயிகளைப் பெரு விவசாயிகள் தூண்டி விடுகிறார்கள்'' என்று விவசாயிகளின் அணியை பிளவுபடுத்த முயற்சிக்கிறார். ஜமீந்தார் ஒழிப்பு இனும்தார் ஒழிப்பு, உச்சவரம்புச் சட்டம் இவைகளுக்குப் பிறகு நிலப் பிரபுத்துவம் இருக்க முடியாது. சட்டங்களின் ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் இன்றும் பதுங்கி இருக்கிறார்கள் என்றால் அவர்களைக் கண்டுபிடிக்கட்டும் எம். ஜி. ஆர். அவர்களின் நிலங்களைப் பறித்து ஏழை உழவர்களுக்குப் பகிர்ந்தளிக்கட்டும். நாம் வரவேற்கிறோம். வாழ்த்துகிறோம். அதை விட்டுவிட்டு மித்திரபேதத்தில் இறங்கிடத் தேவையில்லை. வாதத்திற்காகவே பெரு விவசாயிகள் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அவர்கள் மொத்த விவசாயிகளில் எத்தனை சதவிகிதத்தினர்? ஒரு பத்து சதவிகிதத்தினருக்காக தொண்ணூறு சதவிகிதத்தினர் பாதிக்கப்பட வேண்டுமா?

ஆத்திரத்தில் எம். ஜி. ஆர். அடிப்படை உண்மைகளை அறியத் தவறுகிறார். விவசாயிகளை அரசியல் கட்சிகள் தூண்டி விடுவதாகக் குற்றம் சாட்டுகிறார். ஓர் உண்மையை அதுவும் அப்பட்டமான உண்மையை அவருக்கு உணர்த்துவது நமது கடமை. கோழி கூவுவதற்குப் பின பொழுது புலர்வது உண்மை.

ஆனால்,

கோழி கூவுவதால்தான் பொழுது புலர்கிறது என்பது பேதமை. விவசாயிகளுக்கு ஆதரவாக அரசியல் கட்சிகள் குரல் கொடுப்பது உண்மையாக இருக்கலாம். ஆனால், அரசியல்வாதிகள் ஆதரவுக் குரல் கொடுப்பதால்தான் விவசாயிகள் கிளர்ந்தெழுகிறார்கள் என்பது தவறு.

விவசாயிகள் கிளர்ந்தெழுந்து குரல் கொடுத்த பிறகே அரசியல் கட்சிகள் ஆதரவு தரத் தொடங்கின. கட்சிகளைக் கடந்து வேற்றுமைகளை மறந்து விவசாயிகள் அனைவரும் ஒன்றுபட்டு எழுந்துவிட்டார்கள். விவசாயிகளின எழுச்சியை தேவை உருவாக்கிறது. சூழ்நிலை வளர்க்கிறது. அதுதான் உண்மை. முழு உண்மை.

அடங்கிக் கிடப்பவர்கள் ஆர்த்தெழத் தொடங்குவது அபாய அறிவிப்பு. அமைதியானவர்கள் ஆர்ப்பாட்டத்திற்கு ஆயத்தமாவது ஆபத்தின் அறிகுறி. அவிழ்த்துக்கொட்டிய நெல்லிக்காய்களாய் சிதறிக்கிடப்பவர்கள் ஒன்றுபட்டுத் திரள்வது இறுதி எச்சரிக்கை. இதை ஆட்சியாளர்கள் உணர்வது அவர்களுக்கே நல்லது. அடிப்படை நியாயங்களை உணர்ந்து நேர்மையான வழியில் நிரந்தரப் பரிகாரம் காண்பது நாடாள்வோர்க்கும் நல்லது. அறைகூவல் விடுப்பது. அடக்குமுறையை ஏவ நினைப்பது ஆட்சியாளர் ஆபத்தை அரவணைக்கிறார்கள் என்பதையே காட்டும். முதலமைச்சர் எந்த வழியைத் தேர்ந்தெடுக்கப் போகிறார்? எப்படி நடந்து கொள்ளப் போகிறார்? பொறுத்திருந்து பார்ப்போம்,

●

எழுத்துலகம்

எமிலி ஜோலா

ச. அமுதன்

தமது இருபதுக்கும் மேற்பட்ட படைப்புக்கள் மூலம் 'ரியலிசம்' எனும் தத்ரூபமான தன்மையை இலக்கியத்திற்குத் தந்து தனிப் பாரம்பரியம் பெற்ற ஒரு மனிதன் எமிலிஜோலா. ஆனல் இவரது பிறப்புவழி பாரம்பரியமோ கலப்படமானது. இவரது தந்தை ஃபிரான்சிக்கோ ஜோலா, பாதி இத்தாலி இனமும், பாதி கிரேக்க இனமும் கலந்த ஒரு சிறந்த பொறியாளர். இவரது அன்னை பாரிஸ் நகருக்கருகில் பிறந்த ஒழுக்கமுள்ள கௌரவமான பிரஞ்சுப் பெண்.

எமிலிஜோலா தன் இரண்டாவது வயதிலேயே செத்துப் பிழைத்தார். மூளைக் காய்ச்சலால் பயங்கரமாக அல்லலுற்று உடல்நிலை தேறிய உடனேயே எலும்புருக்கி நோயால் பீடிக்கபபட்டு அவரது உடலமைப்பேவேறுபட்டுவிட்டது. இதிலிருந்து அவர் தேறி வருவதற்குள் தமது பத்தொன்பதாவது வயதில் 'டைபாய்டு' நோயின் பயங்கரத் தாக்குதலுக்கு உட்பட்டதால் அவரது இலக்கிய வாழ்வின் தொடர்ச்சியில் நோயுடன் போராடுவதிலேயே தனது வாழ்வைக் கழிக்க வேண்டியதாகிவிட்டது.

எமிலி தனது பள்ளிப் பருவத்தில் திறமையான மாணவனுகத் திகழ முடியவில்லை. தமது தனித்த இயல்புகளால் தற்காத்துக் கொண்டு வாழ்க்கையில் தன்னம்பிக்கையைக் கொண்டுதான் முன்னேற முயன்ருர்.

எமிலியின் பெற்ரேர்கள் ஏழைகளாக இருந்ததனுல் அவர் தனக்கென ஒரு வேலையைப் பெற இயலாமல் திண்டாடிக் கொண்டிருந்தார். ஒரு புத்தக வெளியீட்டு நிலையத்தில் நண்பர் ஒருவரால் அவருக்கு வேலை கிடைக்கும் வரை அவர் ஏழ்மை இன்னல், மனக்கவலை ஆகியவற்றில் உழன்று கொண்டுதான் இருந்தார்.

எழுச்சிமிக்க கவிஞராகவும் நாவலாசிரியராகவும் தொடங்கி, தமது பிற்கால வாழ்க்கையில் 'ரியலிசம்' எனப்படும் இயற்கையான இலக்கிய வளர்ச்சிக்காகவே பாடுபடத் தொடங்கினுர். தனது பதின்மூன்ருவது நாவலான 'ஜெர்மினல்' மூலமாக இவர் ஒருசிறந்த சமூக சீர்திருத்தவாதி என்ற பெயர் பெற்றுவிட்டார். நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளிகளின் இன்னல்கள் நிறைந்த வாழ்வை அப்பட்டமாகத் தனது நாவல்களில் படம் பிடித்துக் காட்டியது — பிற எழுத்தாளர்களையும் முற்போக்கும் இயற்கைத் தன்மையும் வாய்ந்த இலக்கியங்களைப் படைக்கத் தூண்டியது

ஜோலாவுக்கு ஐம்பது வயதாகும்போதுதான் உலகத்தையே அசைத்துவிட்ட 'ட்ரெய்பஸ்' விவகாரம் தோன்றியது கேப்டன் ட்ரெய்பஸ் தேசத் துரோகக் குற்றச் சாட்டின்பேரில் டெவில்தீவுக்கு நாடு கடத்தப்பட்டார். ட்ரெய்பஸ் குற்றமற்றவர் எனத் தெரிந்து, அதியக்கிரம இராணுவத்தினரையும் அரசியல்வாதிகளையும் மிகத் தீவிரமாகச் சாடியதுடன், ஜோலா பிரெஞ்சுக் குடியரசுத் தலைவருக்குப் புகழ்பெற்ற தமது பகிரங்கக் கடிதத்தை அனுப்பினுர். அது சக்தி வாய்ந்த, உணர்ச்சி பூர்வமான அறிக்கையாக மறுக்க முடியாத உண்மைகளையும் குறை நிறைகளையும் கோடிட்டுக் காட்டுகின்ற எழுச்சிமிக்க ஆயுதமாகத் திகழ்ந்தது. ஒவ்வொரு 'பாரா'வும், 'நான் குற்றம் சாட்டுகிறேன்' என்றே தொடங்கியது.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த பத்திரிகைகளின் வாயிலாக ஜோலாவுக்கு எதிராகக் கணைகள் தொடுக்கப்பட்டு, பொதுமக்கள் உட்பட அனைவருமே அவருக்கு எதிராகக் கிளம்பிவிட்டனர். நாட்டைவிட்டே விரட்டப்பட்டு இங்கிலாந்தில் தலைமறைவாக வாழும் நிலை எமிலிக்கு ஏற்பட்டது. ஆனல் முடிவில் 'ட்ரெய்பசி'ன் வழக்கை மறுபரிசிலனை செய்யும் பொழுது அவர் குற்றமற்றவர் என்று விடுதலை செய்யப்பட்டார்.

புகழ்மிக்க நாவலாசிரியரான அனத்தோல்ப்ரான்ஸ், ஜோலா ஒரு சிறந்த எழுத்தாளர் என்றும் நியாயத்திற்காகப் போராடும் மாவீரர் என்றும் புகழ்மாலை சூட்டுகிருர் எமிலி ஜோலா, மனிதனின் மனச்சாட்சிக்கு ஓர் அத்தாட்சியாக விளங்கியதாக அவர் குறிப்பிடுகிருர்.

எழுதுவதற்காகவே வாழும் எழுத்தாளர்கள் மத்தியில் எழுத்தை நியாயத்திற்கெனப் பரணி பாட வைத்த எமிலிஜோலா — சமூகத்திற்கெனப் போர்ப் பாட்டை அமைக்கத் துடிக்கும் எழுத்தாளர்களுக்கு இலக்கணம் சமைத்தவர்களிலே குறிப்பிடத்தக்கவர்.

தொலைபேசிஎண் கடை: 33213 இல்லம் 31922
நாம்நாடுவோர் தவருமல் நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு & விற்பனை நிலையம்
92. திருப்பரங்குன்றம் சாலை மதுரை 11

தனிச்சிறப்பு: சிலேபி, தெக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முறுக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்
உரிமையாளர்
பே. தேவசகாயம்
கிளைகள்: 261. மேலமாசி வீதி, 70. சுவாமி சன்னதி
72. அழகர்கோவில் சாலை, 72.C, பெரியார் சாலை, மதுரை.

நடைபாதைக் கோயில்களும் சந்தர்ப்ப அரசியல்வாதிகளும்!

சட்டத்தை இயற்றியவர்களே சட்டத்தை உடைக்கும்போது மக்கள் என்ன செய்ய முடியும்? சமீபத்தில், பம்பாயில் இரண்டு சட்டசபை உறுப்பினர்களும், ஒரு நகராட்சி உறுப்பினரும் நகராட்சி அனுமதியில்லாமல் கட்டிய அநாமதேய கட்டிடம் ஒன்றை நகராட்சி ஊழியர்கள் இடிக்க வரும் போது தடுத்துவிட்டனர்.

இந்தத் திடீர்க் கோயில் போன ஆண்டு அக்டோபர் மாதம் ஏற்படுத்தப்பட்டது இது குறித்து சில பேர் நடைபாதையில் இடைஞ்சலாகக் கோயில் அமைந்திருப்பதாக நகராட்சி அதிகாரிக்கு புகார் செய்தனர். அதன் பேரில் நகராட்சி அலுவலர்கள் உடைக்கச் சென்ற போது, அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களிடம் கொஞ்சம் நகராட்சி தேர்தல் முடியும்வரை தாமதம் செய்யுமாறு வேண்டினர்.

உண்மையில், இந்தத் திடீர்க் கோயிலைப் பயன்படுத்தி மககளிடம் மதத்தின் சிந்தனையால் அரசியல்வாதிகள் ஓட்டுகளைப் பெற்றுக் கொள்கின்றனர்.

நகராட்சித் தேர்தலும் முடிந்தது; அந்தக் கோயிலும் நாளுக்கு நாள் வளர்ந்து மிக அருமையாக நடு வீதியில் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக அமைந்தது. இதனால் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் மாநில முதலமைச்சர் சர்தார்பாவரிடம் "நகராட்சியின் பொறுப்பற்ற தன்மையாலும், ஊழல் மிகுதியாலும்" இம்மாதிரி அநாமதேய கோயில்கள் ஏற்படுவதாகவும் அதைத் தடுத்து நிறுத்தும் படியும் புகார் செய்தனர்.

அதன்பேரில் மறுபடியும் போலீஸ் உதவியுடன் நகராட்சி அலுவலர்கள் இடிக்கச் சென்ற போது புகார் செய்த அதே சட்டமன்ற உறுப்பினர்கள். 'இந்து மதத்திற்கு எதிராகச் செய்வது' என்று இடிக்க வந்த ஊழியர்களையும் தடுத்து நிறுத்தி விட்டனர்.

மக்களுடைய பிரதிநிதிகள் ஒரு சில நேர்மையற்றவர்கள் உதவியுடன். மதச் சுரண்டலைப் பயன்படுத்தி சட்டத்தை உடைக்கின்ற தன்மை உண்மையிலே ஒரு பரிதாபகரமானதாக உள்ளது.

இது பம்பாயில் மட்டுமல்ல; எல்லா தலைநகரங்களிலும இம்மாதிரி நூற்றுக்கணக்கான கட்டடங்கள் போக்குவரத்திற்கு இடைஞ்சலாகவும், அதே நேரத்தில அரசாங்கத்திற்கு சொந்தமான இடத்திலும் அமைகிறது.

இதில் 'பூசாரி' கடவுளின் கிருபையை ஒரு பக்கம் வியாபாரம் செய்தாலும். மறுபக்கம் டீக்கடைகளும். சிகரெட், வெற்றிலை பாக்குக் கடைகளும் கோயிலைச் சுற்றி ஏற்படுத்தப்படுகின்றன. அதோடு மட்டுமல்லாது சூதாட்டம், விபச்சாரம், போதை மருந்துகள் விற்பனை செய்யும் 'புனித' இடமாகவும் இவை உள்ளன.

இவையெல்லாம் சட்டத்தை நடைமுறைப்படுத்தும், போலீஸ் நகராட்சி அதிகாரிகள் கண் பார்வையில்தான் நடக்கிறது. ஆனால் சந்தர்ப்பவசமாக ஒரு சில நேரங்களில் நடவடிக்கை எடுத்தாலும் அதை மக்களின் பிரதிநிதிகள் இம்மாதிரியான கிரிமினல் குற்றவாளிகளை பாதுகாத்து விடுகிறார்கள்.

மக்களே விதிமுறைகளை கடைபிடிக்காமல் இருக்கும்போது, தனிமையாக ஊழலை வெளியேற்ற வேண்டும் என்று பேசிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை.

(காரவன் ஆங்கில - இதழ்த் தலையங்கம் — தமிழில்: பாலு)

★

அப்பாவி அய்யாசாமி

யாரோ ஒரு நடிகர், 'மாவீரன்' பத்திரிகையில் வேலைபார்க்கிற ஆளை மிரட்டினாருங்கறதுக்காக அந்த நடிகரை போலீஸ்காரங்க உடனே ஓடிப் போய் 'லபக்'ன்னு புடுச்சுருக்காங்க. இந்த சுறுசுறுப்பை புட்லூர் தண்டபாணியையும், முருகையனையும் கொலை பண்ணின ஆட்களைப் புடிக்கிறதில போலீஸ்காரங்க காட்டலையே... ஏங்க?

கலைஞர் பதிலளிக்கிறார்

கே. பிரதாப்சிங்
3.8 காமராஜ் வீதி
அரகண்ட நல்லூர்
605752

கேள்வி: 'இனமுரசு' 'அலை ஓசை' 'முரசொலி' இப்படிப் பல்வேறு இதழிலும் பதிலளித்துவிட்டீர்கள் இப்போது நம்நாடு இதழில் சந்திக்கிறோம்; இப்படி ஒரு சந்திப்பு. விரைவில் 'குங்குமம்' இதழிலும் நிகழ வேண்டும் என்பது என் விருப்பம்! நிறைவேற்றுவீர்களா?

பதில்: காலம் பதில் சொல்லும்.

குமாரி ஆ. மலர்விழி
அண்ணா நினைவு மன்றம்
காந்திநகர்
விருத்தாசலம்.

கேள்வி: அன்புத் தலைவரே! அனைத்துத் துறையிலும் வல்லவராக விளங்கும் தாங்கள் 'ஒரு சிறந்த டைரக்டர்' என்றும் பெயர் எடுக்க வேண்டும். இந்த என் ஆசையை நிறைவேற்றுவீர்களா?

பதில்: அன்புத் தங்கையே! அனைத்துத் துறையிலும் வல்லவன் என்று நீ கூறுவது என்பால் கொண்ட பாசத்தின் காரணமாக! ஒருவன் எல்லாத் துறையிலும் வல்லவனாக இருக்க முடியாது, உன் விருப்பம் போல் நான் சிறந்த டைரக்டர்என்று பெயர்எடுக்க முடியும். காரணம்; நான் பல ஆண்டுக் காலமாக படத்துறை அனுபவம் பெற்றவன். இருந்தாலும் எனக்குள்ள அரசியல் பணிகள் இயக்குநர் பணிக்கு எனக்கு இடம் தராது



ஸ்ரீ சுகுமாரன்
புன்னை
மருதாடு (வழி)
வந்தவாசி வட்டம்
604405

கேள்வி: முன்னால் பதில் அளிக்காமல் பின்னால் பதில் சொல்வதாகக் கூறுபவரை எதற்கு ஒப்பிடலாம் என்பதைக் கூறுங்களேன்.

பதில்: 'புறங்கூறுபவர்' வரிசையில் சேர்க்கலாம்.

ம நீதிபதி
6, கிருஷ்ணாபுரம்
4-வது குறுக்குத்தெரு
மதுரை —9

கேள்வி: கொள்கையில் உங்களைத் தாக்க முடியாமல் தனிப்பட்ட முறையில் உங்களை 'அர்ச்சனை' செய்கிறவர்களுககுத் தாங்கள் கூறும் பதில் என்ன?

பதில்: ஆண்டவனை அர்ச்சனை செய்தால் ஏதாவது பலன் கிடைக்கும் என்று பக்தன் எதிர் பார்க்கிறானல்லவா?

அதுபோல இந்தமா நிலத்தை ஆண்டவனை (என்னை) அர்ச்சனை செய்வதின் மூலம் தங்களுக்கு ஏதாவது பலன் கிடைக்குமா என்று "இடமாறிகள்' எதிர் பார்ப்பது இயல்புதானே!

பி. எஸ். டி. மாத்யூஸ்
மாணவர் தி. மு. க.
554 ஜவகர் பஜார்
கரூர். 639001

கேள்வி: தமிழினத் தலைவரே! இன்றைய நிலையில் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் பணிகள் யாவை?

பதில்: 1967 விருகம்பாக்கம் மாநாட்டில் அண்ணா குறிப்பிட்டாரே; தமிழர்களின் மரபும், இலக்கியமும் வரலாறும், மொழியும் காப்பாற்றப்பட வேண்டுமென்று; அந்தப் பணிக்காக மாணவர்கள் தங்களை ஒப்படைத்துக்கொள்வதோடு — இந்தி ஆதிக்கப் படையெடுப்பை முறியடிக்கும் போர் வீரர்களாகவும் பயிற்சி பெறவேண்டும்.

க இராமலிங்கன்
கோலியனூர் 605103

கேள்வி: இன்றைய தமிழக அரசின் சட்டம் எந்த நிலையில் உள்ளது?

பதில்: நூல் அறுந்த பட்டமாக!

கவிஞர் இடிமுரசு
3. மயிலாப்பூரான் தெரு
சென்னை 14

கேள்வி; சினிமா உலகைப்பற்றி மக்களுக்குத் தாங்கள் தரும் அறிவுரை என்ன?

பதில்; நல்லோராக நடிப்பவர்கள் எல்லாம் நல்லவர்களுமல்ல! கெட்டவர்களாக நடிப்பவர்கள் எல்லாம் கெட்டவர்களும் அல்ல. தீயவரும் நல்லவரும் இரண்டு பாத்திரங்களை ஏற்பவர்களிலும் இருக்கிறார்கள் இந்த உண்மையை மக்கள் புரிந்து கொண்டால் போதுமானது.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

(13 பக்கத் தொடர்ச்சி)

எ. கருணாநிதி
கலைஞர் பிரியன்
51-C வீரப்பன் தெரு
போளூர் (வ. ஆ) 606803

கேள்வி: எனக்கு ஒரு நண்பன் இருந்தான். இன்பம் வரும்போதெல்லாம் என்னுடன் இருந் அவன் துன்பம் வரும்போது என்னைக் கேலிபேசி ஏளனம் செய்தான். அவனைப் பற்றித் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: உடன்பிறப்பே! உனக்கும் அப்படி ஒரு நண்பனா? என் செய்வது? உனக்கும் எனக்கும் பெயர்ப் பொருத்தம் அப்படி!

●

இரா. பிரபாகரன். செயலாளர்
பூங்கா நகர்ப் பகுதி மாணவர் தி. மு க.
35, வீரப்பன் தெரு. சென்னை — 1

கேள்வி: கலைஞரே! இந்தியை எதிர்த்து எங்களது உயிரைப் பணயம் வைக்க எப்போது உத்தரவிடுவீர்?

பதில்: ஜனவரி 26-ல் களத்தில் குதித்து முதல் கட்டப் போராட்டத்தைத் தொடங்கி விட்டோமே, இனி இந்தி ஆதிக்கம் அகன்றிடும வரையில் தொடர்ந்து போராட்டம் தான்!

●

தவ. மல்லன், பள்ளபட்டி, 624233
மதுரை மாவட்டம்.

கேள்வி: எதிர்க் கட்சியினர் மீது குறைபடும் முதல்வர் எம். ஜி. ஆர். தமது கட்சியினரால் நடத்தப்படும் பத்திரிகைகளில் தங்களைப் பற்றி கீழான நிலையில் எழுதுவதை ஏன் தட்டிக் கேட்க மறுக்கிறார்?

பதில்: பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுகிறவர் எம். ஜி. ஆர். என்பது எனக்கு நன்ருகத் தெரியும். அவர் தூண்டுதலின்பேரில் என்னைப் பற்றி இழிவாக எழுதுகிறவர்கள் குறித்து நான் கவலைப்படுவதில்லை. அவர்கள் என்னைக் குறித்துப் பாராட்டிப் பேசியவைகளையும், எழுதியவைகளையும் நினைத்துக் கொண்டு நானே சிரித்துக்கொள்கிறேன்.

●

ஜெ. சந்தான கிருஷ்ணன்,
4, கமலா — 2-வது தெரு.
மதுரை — 625002

கேள்வி: தாங்கள் கதை வசனம் எழுதிவரும் திரப்படங்கள் அரசியல் கலக்காமல் மக்களின் மூட நம்பிக்கையை அகற்றி பகுத்தறிவு புகட்டும் இனிய தமிழ்க் காவியங்களாக வெளி வரவேண்டும் என்பதே என் பேரவா. நிறைவேறுமா?

பதில்: அரசியலில் மோசடி செய்தவர்களை மக்களுக்கு அடையாளம் காட்டுவதும் தேவையான காரியந்தானே நீங்கள் விரும்புவதுபோல பகுத்தறிவுக் கருத்துக்களை மையமாக வைத்து வெளிவரப் போகும் படம்தான்; "ஆடுபாம்பே!"

(தொடர்ச்சி 23ம் பக்கம்)

சட்டமன்றத்தில் கிட்டப்பாவின் சாதனை!

தமிழகச் சட்டமன்றத்தில் தி மு க கொறடா மாயூரம் என். கிட்டப்பா. சட்டமன்ற வரலாற்றிலேயே புதிய சாதனையைப் புரிந்திருக்கிறார்.

1971 - ஆம் ஆண்டு முதல் 1976 — ஆம் ஆண்டு முடிய ஐந்தாண்டுக் காலத்தில் அதிகமான கேள்விகளை சட்டமன்றத்தில் எழுப்பியவர் கிட்டப்பாதான். மொத்தம் 5735 கேள்விகளை அவர் கேட்டிருக்கிறார்.

சட்டமன்றத்தில் சிறந்த பணியாற்றும் உறுப்பினருக்காக வழங்கப்படும் ஆர். வி. கிருஷ்ணய்யர் பதக்கம் கிட்டப்பாவுக்கு வழங்கப்படவிருக்கிறது. திரு. கிட்டப்பா அவர்களைப் பாராட்டி வருகிற 14—3-79 அன்று சென்னை மயிலாப்பூர் சீனிவாச சாஸ்திரி மண்டபத்தில் நடைபெறவிருக்கும்விழாவில் முன்னாள் முதல்வர் திரு. பக்தவத்சலம் அவர்களால் கிட்டப்பாவுக்கு இந்தப் பதக்கம் வழங்கப்படும்.

1967 முதல் 1971—ஆம் ஆண்டு வரையிலான ஐந்தாண்டுக காலத்தில் அதிகமான கேள்விகளைக் கேட்டவரும் திரு.கிட்டப்பாதான். அப்பொழுதும் திரு. கிட்டப்பாவுக்கு, இலட்சுமிபுரம் யுவர் சங்கத்தில் இதேபோல ஒரு பாராட்டு வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

●

நான் மரணத்தின் வாயிலிலிருந்து பேசுகிறேன்!

[பாகிஸ்தானின் முன்னாள் அதிபர் பூட்டோ, மரணத்தின் வாயிலிலிருந்து விடுத்துள்ள இறுதிச் செய்தி]

இந்த நெருக்கடியான நேரத்தில் எனக்கு விரோதமான பிரச்சாரம், துப்பாக்கிக் குண்டுகளின் வேகத்தில் முடுக்கிவிடப்பட்டிருக்கிறது. இந்தச்சமயத்தில் அடுக்கடுக்கான வீண் பழிகள் என் மீது ஏன் சுமத்தப்படுகின்றன என்பதைக் கடைந்தெடுத்த கயவன் கூட நன்கறிவான்: நாகரிக மக்கள் இதுகாறும் அறிந்திராதபடுமோசமான இழிவுப் பிரச்சாரங்கள் கடந்த ஓராண்டுக்கு மேலாகக் கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கின்றன. இந்தக் கருவறுக்கும் படலம், உச்ச நீதி மன்றம் என் மேல் முறையீட்டை விசாரிக்கும் நேரத்தில உச்சக் கட்டத்தை எட்டியிருக்கிறது இது வெளிப்படையாகவே தெரிகிறது.

1978 மார்ச் 18 முதற்கொண்டு ஒரு நாளில் 24 மணி நேரத்தில் ஏறத்தாழ 22 அல்லது 23 மணி நேரத்தை நெருக்கமிக்க, மூச்சுத் திணறவைக்கும் தனிமைச்சிறையில் அடைந்து கிடக்கிறேன், துப்புரவற்ற இந்த மரணச் சிறை கோடையிலும் சரி, குளிர் காலத்திலும் சரி, முடை நாற்றம் வீசுகிறது மங்கிய ஒளியில், என் கண்பார்வை மோசமடைந்து விட்டது. என் உடல் நலம் சீர்கெட்டு விட்டது தனிமைச் சிறையில் ஏறத்தாழ ஓராண்டுக் காலமாக வாடுகிறேன், ஆனால்: என் நெஞ்சுறுதி சிறிதும் குன்றவில்லை; குறையவில்லை. ஏனெனில், நான் அவ்வளவு எளிதில் எரிந்து விடும் மரக்கட்டையல்ல. மட்டு மீறிய அவலத்துக்கு இடையிலும், மனத்திண்மை ஒன்றையே துணையாகக் கொண்டு இந்த மறுப்புரையை எழுதியிருக்கிறேன்,

எத்தனை வெள்ளை அறிக்கைகள் வேண்டுமானாலும் வெளி வரட்டும், மக்கள் மன்றத்தில் எனது தற்காப்புக்காக வாதிட வேண்டிய அவசியம் எனக்கில்லை, நான் நாட்டுக்குச் செய்த சேவைகளை மக்கள் தங்கள் மனக் கண்ணாடியில் தெள்ளத்தெளிவாகக் காண்கின்றார்கள். போர்க் கைதிகள் மீட்பு, காஷ்மீர்ப் பிரச்சினை, இஸ்லாமிய உச்ச மாநாடு, ஐ. நா. பாதுகாப்புக் குழு. பாட்டாளி வர்க்கத்தினருக்காக நான் நடத்திய போராட்டங்கள்-இவை அனைத்தும் என் புகழ்பாடுவன். அருவருக்கத்தக்க இந்த வெள்ளை அறிக்கையில் கண்டுள்ள புனைசுருட்டுகளுக்குச் சாதாரணமாக நான் பதிலளித்திருக்க மாட்டேன். ஆனால், சூழ்நிலைகள் சாதாரணமானவையாக இல்லை. இதில் ஒரு தத்துவம் அடங்கியிருக்கிறது. அதுதான் மறுத்துரைப்பதற்கான உரிமை என்ற தத்துவம்; பொய்யை மெய்கொண்டு சந்திக்க வேண்டும் என்ற தத்துவம்.

கேடுகெட்ட பொல்லாங்குகளிலிருந்துகூட ஒரு சில நன்மைகள் உண்டாகும் என்பார்கள். இந்தப்

(தொடர்ச்சி 16-ம் பக்கம்)

தமிழாக்கம்:

சா. க.

வளரும் சோஷலிசம்!

முதலாளித்துவ நாடுகளை விட சோசலிச நாடுகள் பொருளாதாரத்தில் அதிக முன்னேற்றம் அடைந்து வருகின்றன.

கடந்த ஆண்டுகளில், சோசலிச நாடுகளின் உற்பத்திப் பெருக்கம் சத விகிதம் அதிகரித்துள்ளது. இதே காலக் கட்டத்தில் முதலாளித்துவ நாடுகளின் உற்பத்திப் பெருக்கம் 27 சத விகிதம்தான்!

இதேபோல் —

ஆண்டு தோறும் நாடுகளின் உற்பத்திப் பெருக்கம் 8.2 சத விகிதம் அதிகரித்து வருகிற!

முதலாளித்துவ நாடுகளின் உற்பத்திப் பெருக்கம் 3.5 சத விகிதமாகக் குறைந்து கொண்டு வருகிறது.

('அமிர்த பசார் பத்ரிகா' 20-2-79]

மரணத்தூக்கு அஞ்சி மண்டியிடமாட்டேன்

பழி தூற்றும் அறிக்கையால் எப்படியும் ஒரு நன்மை ஏற்படும்; அதாவது. இழிவான பிரச்சாரம் பற்றியும், பகிரங்கவிசாரணைக்கான உரிமை குறித்தும் ஏற்பட்டுள்ள குழப்பம் அடியோடு அகன்றுவிடும். என் மீதுசுமத்தப்பட்டகொலைக்குற்றம் பற்றிய பகிரங்க விசாரணையை இரகசிய விசாரணையாக மாற்றுவதற்கு நான் எதிர்ப்புத் தெரிவித்தபோது. விளம்பரத்துக்கும், நீதிக்குமிடையிலான வேறுபாட்டை நீதிபதிகளுக்கு உணர்த்த முயன்றேன். ஆனால் முடியவில்லை. நீதிக்கோட்பாடு, பகிரங்க விசாரணையுடன் இரண்டறப் பிணைந்திருக்கிறது. எனவேதான் பகிரங்க விசாரணை நடத்த வேண்டுமென்று நான்கோரினேன். ஒரு குற்றச்சாட்டிற்கான. முக்கியமாக மரண தண்டனைக்குரிய ஒரு குற்றச்சாட்டுப் பற்றிப் பகிரங்க விசாரணையைக்கோரி அரசியல் மற்றும் சட்ட முறையில் போராட்டம் நடத்துவது பற்றி அறநெறி விதிகள்கூட வகுக்கப் பெற்றுள்ளன. அருட்போதகர் மோசஸ் இந்த அறப்போராட்ட நெறியை, கொடுங்கோன்மையிலிருந்து விடுதலைபெற நெடுங்காலம் போராடிய அவருடைய மக்களுக்குப் போதித்தார். ஏசு கிறிஸ்துவின் மலைப்பேருரையில் அடங்கியுள்ள செய்தியும் இதுதான். கடவுளின் கடைசித் தூதர், திறந்த வெளிப்பள்ளிவாசலில்தான் நீதி வழங்கினரேயன்றி 'அந்தப்புர அந்தரங்கத்தில்'' அன்று. ரோமானிய அடிமையாகிய ஸ்பார்ட்டக்கஸ். நீதிக்காகவே உயிர்த்தியாகம் புரிந்தார் பிளேட்டோ அரிஸ்டாடடில் சாக்ரட்டீஸ் போன்றஅனைத்து அறிஞர்களும் பகிரங்க நீதிபற்றியே தத்துவார்த்தங்கள் எழுதினர்கள்.

ஐரோப்பா மற்றும் பிரிட்டன் வரலாற்றில் இத்தகைய பகிரங்க விசாரணைகள் எத்தனையோ நடந்திருக்கின்றன. பகிரங்க விசாரணையை நீதியின் இன்றியமையாத அங்கம் என இங்கிலாந்தின் பண்டைய மரபுச் சட்டம் கூறுகிறது. வீரப் போராட்டம் நடத்தி விடுதலைபெற்ற அமெரிக்க மக்கள். பகிரங்க விசாரணைக்கான உரிமையை, ஓர் அடிப்படை உரிமையாகவே தங்கள் அரசியலமைப்பில் கூறுவது திருத்தம் மூலம் இணைத்திருக்கிறார்கள்,

"நீதி வழங்கப்பட்டால் மட்டும் போதாது, வழங்கப்படுவதாகத் தென்படவும் வேண்டும்'' என்ற கோட்பாடு, மறுக்க முடியாத. அடிப்படையான ஒரு சட்ட விதி.

கொலைக் குற்ற விசாரணையின் போது ஒரு நீதிபதி ''உங்களை விசாரணை செய்வது நாங்கள் தாம்; பொதுமக்கள் அல்ல'' என்று ஒரு ''அற்புதமான'' கருத்தைத் ெதரிவித்தார். இந்தப் புத்திசாலித்தனமான கருத்தினைத் தொடர்ந்து. லாகூர் உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி.'' ஆனல், இவர் விளம்பரத்தை விரும்புகிறார்'' என்றார். எத்துணை வேடிக்கை!

(அடுத்த இதழில் முடியும்)

எலிகளுக்கு ஓர் ஆலயம்

இராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த ஒரு சிறிய நகரத்தில் ஒரு பெரிய கோவில் இருக்கிறது. 15-ஆம் நூற்றுண்டின் ஆரம்ப காலத்தில் 'திவ்ய சக்தி'' பெற்ற கர்ணீ தேவி என்ற பெண்ணொருத்தி இந்தக்கோவிலைக் கட்டியதாகச் சொல்லப்படுகிறது.

இந்தக் கோவிலில் பல்லாயிரக் கணக்கான எலிகள் வசிக்கின்றன! அவற்றுக்கு நல்ல உணவுகள் குறைவின்றி வழங்கப்படுகின்றன. அந்த எலிகளுக்கு வேளா வேளைக்கு உணவு கொடுப்பதும். பாம்பு முதலிய கொடிய பிராணிகளிடமிருந்து அவற்றைப் பாதுகாப்பாக வளர்ப்பதும், அந்தக் கோயிலின் ஒரு பிரிவு ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்பாகும்!

இப்படி. இந்தப் பல்லாயிரக்கணக்கான எலிகளைக் கவனித்துக் கொள்வதற்காக். பக்தர்களிடமிருந்து காணிக்கையாக இலட்சகணக்கான ரூபாய் வருமானம் வருகிறது.

இந்தக் கோவிலில் உள்ள எலிகளுக்கு யாரும் தொந்தரவு தரக்கூடாது.

யாராவது அங்குள்ள எலிகளில் ஒன்றைக் கொன்றுவிட்டால், அதற்குப் பிராயச்சித்தமாக தங்கத்தால் ஒரு எலி செய்து அதை கோவிலுக்குச் செலுத்த வேண்டுமாம்.

— பேட்ரியாட்



முதலிடம் பெறும் லெனின்!

பொதுவுடைமைத் தத்துவம் உலகெங்கும் பரவிட புரட்சி வீரர் லெனின் நூல்கள் அனைத்தும் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன.

சோவியத் ரஷ்யாவில் ரஷிய மொழியில் பதிப்பிக்கப் படும் அவரது நூல்கள் இன்று உலகிலுள்ள 126 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப் பட்டுள்ளன.

மொழி பெயர்ப்பைப் பொறுத்த வரை உலகில் முதல் இடத்தை வகிப்பது லெனினுடைய படைப்புகளேயாகும்.

அண்மையில் இச் செய்தியை யுனெஸ்கோ வெளியிட்டுள்ளது.

இனிக்கும் எல்லைத் தகராறுகள்!

எல்லைத் தகராறுகள் என்றால் சீனாவுக்குச் சர்க்கரைப்பொங்கல் சாப்பிடுவது போல எல்லையிலா ஆனந்தம்.

சீனா தனது அண்டை நாடுகளுடன் எல்லைத் தகராறுகள் கிளப்பிக்கொண்டே இருக்கிறது. உலகில் வேறு எந்த நாடாவது, இந்த அளவுக்கு எல்லைத் தகராறுகளைக்கிளப்பிக் கொண்டிருக்கிறதா என்பது சந்தேகமே.

1962-ம் ஆண்டிலிருந்து இந்திய எல்லைப் பகுதியைச் சேர்ந்த பிரதேசம். சீனாவின் ஆக்கிரமிப்பின் கீழேயே இருந்துவருகிறது. இது குறித்து பேச்சு நடத்த சீனாவுக்கு இந்திய வெளி விவகார அமைச்சர் வாஜ்பாய்சென்றிருந்தபோதே வியட்நாம் மீது சீனா ஆக்கிரமைப்புத் தொடங்கிவிட்டது.

“சில நாட்கள் கழித்து நாங்கள் பின்வாங்குவோம், வியட்னாம் கூறுகிற எல்லைக்கு அப்பால் அல்ல. நாங்கள் நினைக்கிற எல்லைக்கு அப்பால்” என்று சீனா அறிவித்தது. புதிய எல்லைத் தகராறுக்கு வித்திடுகிறது.

பர்மாவுடன் எல்லைப்பிரச்சினையில் தீர்வு கண்டதாக சீனா சொல்லிக்கொள்கிறது. ஆனால் நடப்பது என்ன? இந்திய நாட்டின் வடகிழக்கு எல்லைப் பகுதிகளில் சீனா செய்து வந்ததைப் போல். பர்மியக் கலகக்காரர்களுக்கு ஆதரவும். மற்றும் தளவாட உதவிகளும் வழங்கி, பர்மா நாட்டு எல்லைகளில் சீனா தொல்லைகளை உருவாக்கி வருகிறது!

சீனாவின் மொத்த நில எல்லைகளில்கிட்டதட்டப் பாதி அளவு எல்லைகள் சோவியத் யூனியனையும். இந்தியாவையும் ஒட்டித்தான் உள்ளன. என்றாலும் இந்த எல்லைகளைக் குறித்துச் சீனா தொடர்ந்து தகராறு செய்தே வருகிறது; இவை சம்பந்தமாக ஒரு தீர்வைக் காண்பதற்கு சீனா என்றைக்கும் அவசரப்பட்டதில்லை.

நாடு பிடிக்கும் சீனாவின் ஆசை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது!

மாறாக. சீனா தான் உரிமை கொண்டாடிவரும் பிரதேசங்களை வன்முறையால் பலவந்தமாக ஆக்கிரமித்துக் கொள்கிறது. இந்தியா விஷயத்தில் சீனா இப்படித்தான் நடந்து கொண்டது,

வியட்நாமுக்குச் சொந்தமான பராசல் தீவுக் கூட்டத்தை 1974ல் சீனா இவ்வாறே பலவந்தமாகக் கைப்பற்றி. அவற்றை தன் ஆதிக்கத்தின் கீழ் வைத்துக் கொண்டது. மேலும் தென் சீனக் கடலிலுள்ளஸ்ப்ராட்லி. பிராட்டாஸ் முதலிய ஏனைய தீவுக் கூட்டங்களின் மீதும் சீனா இன்னும் உரிமை கொண்டாடி வருகிறது.

ஜப்பானுக்குச் சொந்தமான செங்காக்கு தீவுகளில் மீது சீனா உரிமை கொண்டாடி வருகிறது.

மற்ற நாடுகளின் பிரதேசங்களின் மீது சீனா உரிமை கொண்டாடுவதன் உண்மையான நோக்கம் என்ன? சந்தேமின்றி அது, பிரதேச விஸ்திரிப்பு நோக்கம்தான். விரும்பும் எந்தஒருதருணத்திலும்நிலைமையை மோசமாக்கி மோதலை உருவாக்குவதற்கு எல்லைப் பிரச்சினைகள், தனக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவதாக சீனா நம்பி வருகிறது. சீனாவின் தலைமையின் நோக்கங்களுக்கும் கொள்கைகளுக்கும் ஏற்ப நடக்குமாறு அண்டை நாடுகளை நிர்ப்பந்திக்க உதவும் ஒரு கருவியாக எல்லைத் தகராறு பயன்படும் என்றும் சீனா கருதுகிறது,

உலகம் முழுவதையும் வெல்லவேண்டும் என்பதே. சீனாவின் ஆசை. இதை வெகு காலத்திற்குமுன்னரே, மாசே. துங் தெளிவாக கூறியிருக்கிறார்

வியட்நாம் மீது சீனா ஆக்கிரமிப்புச் செய்தது அல்லவா? பிரதேச ஆதிக்கத்தை விரிவுபடுத்த வேண்டும் என்ற பேராசையின் விளைவாக எழுந்த திட்டமிட்ட தாக்குதலே அது.

சீனாவுக்குத்தன் அண்டை நாடுகளின் மீது எப்போதும் 'ஒரு கண்' உண்டு. இதற்காகவே அண்டை நாடுகளுடன் எல்லைத் தகராறுகளைக் கிளப்பிக்கொண்டே இருப்பது வழக்கம்.

நெடுங்காலமாக சீனாவெளியிடும் தேசப்படங்களில் அண்டை நாடுகளையும் தன் பகுதிகளாகக் குறிப்பிட்டு வந்திருக்கிறது. சீனக் குடியரசு ஏற்படுவதற்கு முன்னரே

1939-ம் ஆண்டில், மாசேதுங் சீனாவின் இழந்த பகுதிகள் என்று “கொரியா, நியூகு தீவுகள் பர்மா, பூடான். நேபாளம், வியத்நாம் ஆகிய நாடுகளைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார் சீனப் புரட்சிமுடிந்ததும், மங்கோலியா (ரஷ்யப் பகுதி) சீனாவுடன்இணையவேண்டும் என்று கூறியவர் மாசேதுங். சீனக் குடியரசு ஏற்பட்ட பின்னர், சுமார் 30 இலட்சம் சதுர கிலோமீட்டர் பகுதிகளைத் தன்னுடையதென சீன அரசு உரிமை கொண்டாடி வந்திருக்கிறது.

1954-ம் ஆண்டில் 'நவீன சீனாவின் சுருக்கமான வரலாறு” என்ற நூலில் இணைக்கப்பட்டிருந்த தேசப்படத்தில் பர்மா, வியட்நாம கொரியா, தாய்லாந்து. மலாயா. நேபாளம், பூடான். சிக்கிம். சுலு தீவுகள், அந்தமான் தீவுகள் ஆகியவை 'இழந்த பகுதிகள்' என குறிப்பிடப்பட்டிருந்தது.

1972-ம் ஆண்டில் சீனா

(18-ம் பக்கம் பார்க்க)

கோவிலில் நடந்த கொள்ளையோ கொள்ளை!

ஆந்திர மாநிலத்திலிருக்கும் பிரபலமான கோவில்கள் தொடர்ந்து 'திடுக்கிடும்' கதைகளை வெளி உலகிற்குத் தந்து கொண்டிருக்கின்றன.

அண்மையில் மந்திராலயம் கோவிலிலிருந்து. தாழ்த்தப்பட்ட குலத்தைச் சார்ந்தவர் என்ற காரணத்திற்காக ஒரு சட்டமன்ற உறுப்பினர் மேல்சாதிக் குருக்களால் அப்புறப்படுத்தப்பட்டதும் இக் கொடுமையை எதிர்த்து மிகுந்த பரபரப்பு ஏற்பட்டதும் அனைவரும் அறிந்ததே.

அடுத்து இன்னொரு பரபரப்பூட்டும் உண்மைக் கதை வெளியாகி உள்ளது—

சிம்மாசலம் கோவிலில் கடந்த ஆண்டு நவம்பர் திங்களில் பதினைந்து இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நகைகளை யாரோ 'அபேஸ்' செய்துகொண்டு போய்விட்டனர்! ஆனால் — இந்த நகைகள் எல்லாம் 'அசல்' அல்ல; 'போலிகள்' ஆகும்! — உண்மையான நகைகளையெல்லாம் 1965 ஆம் ஆண்டிலேயே கோவில் பூசாரிகள் களவாடி விற்றுவிட்டார்களாம்! தங்கள் திருட்டை மறைகக, 'சாமி'களுக்குப் போலி நகைகளைப் பூட்டி விட்டார்களாம். இந்த உண்மையான நகைகள் அதிக மதிப்புள்ளவைகள். களவாடி விற்கப்பட்ட ஒரு பதக்கத்தின் விலை மட்டும் பத்தரை இலட்சம் ரூபாய் இருக்குமென்று சொல்லப்படுகிறது.

1978—ஆம் ஆண்டு கோவில் நகைகளை 'இன்சூர்' செய்ய ஆணையாளர் சென்றார் ஆனால் எல்லாக் கம்பெனிகளும்' விழித்துக் கொண்டிருந்ததால். இந்தப் 'போலி' நகைகளை 'இன்சூர்' செய்ய எந்தக் 'கம்பெனி'யும் முன்வரவில்லை.

இதற்கிடையே —

1978—ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் கோவிலுக்குச் சொந்தமான பத்தொன்பது கிலோ தங்கத்தை யாரோ கடத்திச் சென்று அதை பம்பாயில் உருக்கி விற்றுவிட்டாராம் அந்த ஆசாமி' யார் என்பதுகூட இன்னும் மர்மமாகவே இருக்கிறது.

வெளி உலகிற்குத் தெரிந்த விவகாரங்கள் இவ்வளவே! இன்னும் தெரியாத விவகாரங்கள் எவ்வளவோ! இவ்வளவு பெரிய மோசடி நடந்திருந்தும் குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதில் அறநிலைய அமைச்சர் அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை என்று சொல்லப்படுகிறது.

இது குறித்துக் காவல் துறையினர் செய்துள்ள புலன் விசாரணைகள் 'ஏனோதானோ'வென்று இருக்கின்றதாம்.

இத்திடுக்கிடும் தகவல்களை வெளியிட்ட பாலகிருஷ்ணம்மா என்ற எம். எல். சி. இவ்வழக்கை மத்திய புலனாய்வுத்துறையிடம் ஒப்படைக்க வேண்டும் என்கிறார்.

—சாலு

இளிக்கும் எல்லை தகராறு...

17ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்ட 'உலக அட்லாஸ்' புத்தகத்தில் நேபாளம் சிக்கிம், பூடான், அசாம், மங்கோலியா, பர்மா, அந்தமான் தீவுகள், மலேசியா, தாய்லாந்து, வியட்நாம் லாவோஸ், கம்போடியா, கொரியா. சுலு தீவுகள், நியூகு தீவுகள் ஆகியவை சீனா இழநத பகுதிகள் என்று காட்டப்பட்டிருநதது சோவியத் யூனியனின் கணிசமான பகுதிகளும். சீனாவின் பகுதிகளே என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்தக் காலத்தில் சீனப் பிரபுத்துவ ஆட்சியாளர்கள் ஆகியவர்கள் மட்டுமின்றி, புராதன மங்கோலியா வெற்றி வீரர்கள், மஞ்சூரியன் மாமன்னர்கள் ஆகியவர்கள் ஆண்ட பகுதிகள் சீனாவுக்குச் சொந்தமானவை என்று கூறுகிறது. நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு சீன வியாபாரிகளும், பிரயாணிகளும் போய் வந்த பகுதிகள், சீனாவுக்குச் சொந்தமானவை என்று உரிமை கொண்டாடுகிறது. 1959-ல் உலகம் பூராவையும் நாம் வெல்ல வேண்டும். நம் குறிக்கோள் உலகம்! உலகிலேயே மகத்தான வல்லரசாக சீனா திகழ வேண்டும்.' என்று மாசேதுங் சொன்னார்.

1965-ல் மாசேதுங் கூறினார்: 'தென் வியட்நாம், தாய்லாந்து, பர்மா, மலேசியா, சிங்கப்பூர் உட்பட தென் கிழக்கு ஆசியாவை நாம் கைப்பற்றவேண்டும் அங்கு இயற்கை வளங்கள் அபரிமிதமாக உள்ளன.' என்று!

இதனால்தானோ என்னவோ அண்டையிலுள்ள நாடுகள் பலவற்றுடன் சீனா, எல்லைத் தகராறுகளைக் கிளப்பிக் கொண்டிருக்கிறது. இதற்காக பல சமயங்களில் ஆக்கிரமிப்புகளிலும் இறங்குகிறது. இந்தியாவுடன் சீனா போராட்டத்தை நாம் மறந்துவிட முடியாது.

(பி)ஸ் இந்தியா)

அதிமுக ஆட்சியில் அல்லற்படும்

தொழிலாளர் வர்க்கம்

பரமத்தி சண்முகம்

திருச்சி சிம்கோ மீட்டர் தொழிலாளர்களின் போராட்டம் வெற்றிகரமாகத்தொடர்கிறது: சட்டமன்றத்தில் இந்தப் பிரச்சினை குறித்து நமது தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும். திரு. ஆர் உமாநாத். மற்றும் அத்தனைக் கட்சித் தலைவர்களும் ஓடை விடாது குரல் எழுப்பி விட்டனர்.

போராட்டம் எல்லாக்கட்டத்திலும் தொடர்ந்து நடைபெறுகிறது.

சென்ற 20–2–79 அன்று அறிவிக்கப்பட்ட பொது வேலைநிறுத்தத்துக்கு எதிராக, ஆளும கட்சி எம். எல். ஏ. மாணிக்கம் என்பவர் அறிக்கை விட்டார். அவரது கட்சி அடியாட்களும் கடைத்தெருக்களில் 'புனித ராஜ்ய பரிபாலனத்தை' நடத்தினர் எனினும் பொது வேலை நிறுத்தம் ஏறக்தாழ வெற்றிகரமாகநடந்தது.

தினத்தந்தி, தினமணி தினமலர் போன்ற ஏடுகள். பந்த் பிசுபிசுத்தது என்று செய்தி வெளியிட்டுவிட்டு அதற்குக் காரணம் பஸ்கள் வழக்கம்போல் ஓடின என்றும் மறைமுகமாகக் குறிப்பிட்டிருந்தன. அதாவது தி. மு. க. ஆட்சிக் காலத்தில் எம். ஜி. ஆர் கட்சி ரவுடிகளும் காலிகளும் செய்தது போல் ''பந்த்' நடக்கும் இடங்களில் பஸ்கள் நொறுக்கப்பட வேண்டும். தீயிட்டுக் கொளுத்தப்பட வேண்டும். அல்லது இந்திராகாந்தி கைதானபோது ஏற்பட்ட அராஜக அட்டூழியங்கள். நாகர்கோவில் பஸ் எரிப்பு போன்ற வன்முறை பாதகச் செயல்கள் நடைபெவேண்டும். போலும் அப்போதுதான்' பந்த்' வெற்றி என மேற்கண்ட ஏடுகள் ஒப்புக்கொள்ளுமா? அல்லது அது மாதிரியான செயல்களுக்குத் தூண்டுகின்றனவா என்பது தெரிந்தாக வேண்டும்.

அது ஒருபுறமிருக்க,

சிம்கோ மீட்டர் பேக்டரியில் ஐ. என். டி. யூ. சி. போட்ட 12 [3] ஒப்பந்தம் பெரும்பான்மைத் தொழிலாளர்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை' அதன் பிறகு ஒரு புதிய சங்கம் உருவாகிறது அது சி. ஐ, டி. யு. வாக அமைகிறது.

இதில் ஐ. என். டி. யூ. சி. நாணயமாகச் செய்திருக்க வேண்டியது. என்னவெனில் ஒப்பந்தம் உருவாகுமுன் அதன் தன்மை பற்றி 1200 தொழிலாளர்களையும் கூட்டிவைத்துவிளக்கியிருக்க வேண்டும், அல்லது ஒப்பந்தம் ஆன பிறகாவது அதன் பலாபலன், பற்றி பேரவையைக்கூட்டி விளக்கியிருக்க வேண்டும்.

ஒன்று ஒப்பந்தம் உருவாகுமுன் அதற்குத்தொடர்புடைய தொழிலாளர்களின் பெரும்பாலானவர்களுடைய ஒப்புதல் பெறவேண்டும். அல்லது ஒப்பந்தமான பிறகு அதன் மீது தொழிலாளர்களது சம்மதத்தையாவது பெற வேண்டும். இது தொழிற்சங்க நடவடிக்கையில் பால பாடம் மட்டும் அல்ல! தலையாய சட்ட ரீதியான கடமையுமாகும்.

ஆனால் ஐ. என். டி. யூ. சி. தலைவர்கள் ஒப்பந்தம் போட்டதும் பேச்சுவார்த்தைகள் நடந்ததும் ஒப்பந்தம் ஆன

(தொடர்ச்சி 20-ம் பக்கம்)

ஓர் அழுகுரல் கேட்கிறது!

சேடப்பட்டித் தொகுதி காளப்பன்பட்டியைச் சேர்ந்த 91 கிராம வாசிகள்,

"இனிமேல் சாராயம் காய்ச்ச மாட்டோம், விற்கமாட்டோம், குடிக்க மாட்டோம் என்று முதல்வர் எம். ஜி. ஆர். முன்னிலையில் சாராயம் காய்ச்சும் பானைகளைப் போட்டு உடைத்தனர்- இதுசெய்தி

"இனிமேல் எங்கள் மாமூல் என்னவது?"

ஒரு அ. இ. அ. தி. மு. க. அமைப்பாளரின் அழுகுரல்!

அ. தி. மு. க. குண்டர்களின் புனித ராஜ்ய பரிபாலனம்...

[19-ம் பக்கத் தொடர்ச்சி]

சில நாட்கள் சென்ற பிறகு கம்பெனியின் நோட்டீஸ் போர்டு மூலம் தொழிலாளர்கள் பார்க்கிறார்கள். வெறும் ரூ. 4.50 கூலிக்கான ஒப்பந்தம் நிரந்தரம் ஆக வேண்டிய தொழிலாளர்கள் அப்படியே விடப்பட்டிருப்பதும் பெரும் அதிர்ச்சியை உண்டாக்குகிறது எனவே போராடத் தொடங்குகின்றனர்.

இதில் அரசு, அதிலும் ஏழை பங்காளிகள் அரசு, பாட்டாளிகளின் பாதுகாவல் அரசு என்ன செய்திருக்க வேண்டும்?

போட்ட ஒப்பந்தம் தொழிலாளர்கட்குப் பாதகமானது,

பெரும்பான்மைத் தொழிலாளர்களால் முற்றிலும் நிராகரிக்கப்பட்டுத் தூக்கியெறியப்பட்டுவிட்டது. ஏறத்தாழ 12(3) ஒப்பந்தம் செத்து விட்டது.

ஐ. என். டி, யு. யும் நிர்வாகமும் கொண்ட கூடாநட்பால்— கள்ளத் தனத்தால்— பிரசவித்த அந்த ஒப்பந்தம் என்ற குழந்தை முடமாகப் பிறந்து மூக்கும் கண்ணும் இன்றி எழுந்து நடக்கக் கை கால்கள் இன்றிப் பிறந்த மூளிக் குழந்தை. இன்னும் சொல்லப் போனால் வயிற்றுக்குள்ளேயே செத்துப் பிறந்த குழந்தை.

இதை அமைதியாக, அழுகையோ, ஆர்ப்பாட்டமோ, துக்கமோ, துடிதுடிப்போ இல்லாமல் அடக்கம் செய்துவிட்டு ஆகவேண்டியதைப் பார் என்று நிர்வாகத்துக்கு அறிவுரை சொல்ல வேண்டும் அரசு.

ஆனால் தொழிலாளர் நல (?) அமைச்சர் ஒருவர் இருக்கிறாரே, அவர் இந்தக் குழந்தையைத் தூக்கி மடியில் வைத்துக்கொண்டு இது சட்டப்படி பிறந்த செல்லக் குழந்தை. இதைத் தரையில் கூட நடக்கவிடக்கூடாது இரத்தினக் கம்பளம் விரித்து நடைபழக்க வேண்டும் என்று வர்ணிக்கிறார்.

இதற்கு முதலமைச்சரும் ஒத்து ஊதுகிறார், அதுமட்டுமல்ல செய்தித்துறை அமைச்சர் வீரப்பன் கூட இதைக் சிலாகித்து. புதுக்கோட்டையில் நடைபெற்ற அரசு விழா ஒன்றில் மாவட்டக் கலெக்டர் தலைமையில் 26-2-79 அன்று பேசுகிறார். தொழிற்சங்கத் தலைவர்களையும் கேலி செய்கிறார். இதற்கு என்ன அர்த்தம்? இது என்ன ஜனநாயகம்? எந்த 12 (3.) ஒப்பந்தம் செயல்படாததோ அதைச் சீராட்டிப் பாராட்டி சீவிமுடித்துச் சிங்காரப் பொட்டு வைத்து ஊர்ஊராக எம். ஜி. ஆரும் அவரது 'சக' மந்திரிகளும் ஊர்வலம் வருவானேன்?

இதெல்லாவற்றையும்விட:

திருச்சியில் இரண்டு ஆளும் கட்சி எம். எல். ஏ.க்கள் இருக்கின்றனர். ஒருவர் மாவட்ட அமைப்பாளருங்கூட. அவர் அதாவது இரண்டாவது தொகுதி எம். எல். ஏ. திரு அர். சௌந்தரராசன் சிம்கோ தொழிலாளர்கள் போராட்டத்தை ஆதரித்து அறிக்கையே விடுகிறார்... இதில் சவுரவம் பார்க்காமல் அன்றாடம் உழைக்கின்ற உழைப்பாளிகளின் வாழ்க்கையோடு விளையாடாமல்—உடனடியாக நிர்வாகம் நியாயமான கூலியையும் நிரந்தர வேலையையும் அளித்துத் தொழிற் தகராறைத் தீர்க்க வேண்டும்... என! (28–1–79 மாலை முரசு.)

அதுமட்டுமல்ல— தொழிலாளர்கள் போராட்டத்தை ஆதரித்து உண்ணாவிரதம் இருக்கும் தொழிற்சங்கத் தலைவர்களைப் பாராட்டியும் போராட்டத்தை ஆதரித்தும் உண்ணாவிரதத்தை ஆதரித்தும் பேசுகிறார்.

அதே நேரம் — இன்னொரு பகுதி எம் எல். ஏ. ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்தான்— எதிர்த்துப் பேசுகிறார் எதிர் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்.

தொடர்புடைய தொகுதி எம் எல். ஏ. மாவட்டக்கட்சி அமைப்பாளர், தொழிலாளர்கள் பக்கம் நிற்கிறார், "கவுரவம் பார்க்காதீர். தொழிலாளர் வாழ்வோடு விளையாடாதீர்" என அறிக்கை விடுகிறார். அவர் சார்ந்த கட்சியின் அமைச்சர்கள், முதலமைச்சர் உள்பட அதற்கு மாறான நிலையில் நிற்கிறார்கள். இது என்ன விபரீதம்?

இதேபோல்தான் கரூர் எல். ஜி. பி. தொழிலாளர்கள் போராட்டத்தின் நியாயத்தை உணர்ந்து பொறுப்புள்ள அதிகாரிகள் அனைவரும் ஒரு சுமுக உடன்பாடு காணத்தக்க நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போதே அ. தி. மு. க. அரசு, டி. ஐ. ஜி. தேவாரத்தை அனுப்பி போலீசாரை அத்துமீறி தொழிற்சாலைக்குள்ளேயே அனுப்பித் தொழிலாளர்களை கடுமையாகத் தாக்கி போராட்டத்தை உடைக்கப் பார்த்தனர்.

இறுதியில் தொழிலாளர்களே வெற்றி பெற்றனர். இதில் இருந்து தெரிவது என்னவென்றால் சிம்கோ மீட்டர் முதலாளியிடம் எம். ஜி ஆரும் அவரது மந்திரிகளும் அடிமைகளாயுள்ளனர் என்பதுதான்!

கரூர் எல். ஜி. பி. முதலாளியிடமும் அதே நிலைதான் எனினும் குமுறி எழுந்த பத்தாயிரம் தொழிலாளர்களின் வீரம் மிக்க எழுச்சியும் வேகமும் அதிகாரிகளை அரசைப் பணிய வைத்துவிட்டது. இது சிம்கோவுக்கு மட்டுமல்ல; நாடு முழுதும் உள்ள தொழிலாளர் வர்க்கம் அனைத்துக்கும் பொருந்தும்

திருச்சி சிம்கோ மீட்டர் விவகாரம் அங்குள்ள பாதிக்கப்பட்ட தொழிலாளர்கட்கும் நிர்வாகத்துக்கும் நடைபெறும் ஒன்றல்ல! முதலாளிகளிடம் பேரம் பேசாமல் ஆளுகின்ற ஆட்சியாளர்களை அதிகாரம் பூசிகளை நம்பிக்கெட்ட தொழிலாளி வர்க்கத்துக்கும் இடையே நடைபெறும் தர்மயுத்தமாகும்!

★

இந்திரா பெற்றெடுத்த 'ரா' இன்று செய்வது என்ன?

2

சரண்சிங்கின் எதிர்ப்பினை ஒழித்துக்கட்ட — அவரை வெளியேற்ற மேற்கொண்ட நடவடிக்கையின் வெளிப்புற அடையாளமான கபட நாடகத்தில் — நாகரிகமற்ற நாடகத்தில் முக்கிய பாத்திரம் ஏற்றுக்கொண்டது இந்த 'ரா' தான்!

ஆகவேதான். அதன் கடந்த கால நடவடிக்கைகளை — காட்டுமிராண்டிச் செயல்களைச் சந்திக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலையிலேயிருநது விடுவிக்கப்பட்டுள்ளது — பாவ மன்னிப்பு வழங்கப்பெற்றுள்ளது!

'நெருக்கடி நிலை'க் காலத்தில் உகாண்டாவிலிருந்து, இந்திய வம்சா வழியினரைத திருப்பி அனுப்பப்படுவதற்காக, 'தாடே' என்னும் உடன்படிக்கையின்படி. 'இடி அமீன்' அரசிடமிருந்து. இந்திய அரசு பெற்ற தொகை450 கோடிரூபாயாகும்! அதில் பேரத் தொகையாக—சமூக—பொருளாதார ஏற்பாட்டுப் பங்குதொகையாக 140கோடி ரூபாய் எடுதது, சுவிஸ்' வங்கியில் செலுத்தி கணக்கு வைக்கப்பட்டது. தாய் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுபவர்கள் 'உகாண்டா' நாட்டில் செந்நீர் சிந்தி உழைத்துப் பெற்ற பணத்தில் 140 கோடி ரூபாய் இழந்நு அவர்கள் கையறு நிலையில் விடப்படுவது எந்த வகையில் உகந்தது? அதனை இன்றைய அரசேனும் கண்டறிந்து விளக்கம் தருமா?

140 கோடி ரூபாயை, ஓர் 'அநாமதேய'க் கணக்கு என்பார்களே அதுபோல ஊர் பேர இல்லாத கணக்கில் சுவிஸ் வங்கியில் போட்டு வைத்த ஆசாமி 'ரா'வின் கூட்டு அமைப்பினைச் சார்ந்த 'பரூச்சா' என்பவர்!

இப்படி 'நெருக்கடிகால'த்தில் நடைபெற்ற மோசடிக்கு பரூச்சாவுக்குஉடந்தையாக— மறைமுக ஆதரவாக இருந்ததற்குக் கைமாறாக ஜகத் மேத்தா என்பவருக்கு வெளி விவகார அமைச்சகத்தில் மிக உயர்ந்த பதவி அளிக்கப்பட்டது — அந்தப் பதவி பெறுவதற்குரிய தகுதி பெற்ற பலரைப் பின் தள்ளிவிட்டு!

நெருக்கடி நிலை காலத்து—

ஊழல்பற்றி விசாரணையா...மூச்!

"குதிரை ஏல விற்பனையில் ஊழல் நடக்கிறது" — செய்தி.

"கூறப்படும்புகார்பற்றி அரசு விசாரித்து நடவடிக்கை எடுக்கும்"—

அமைச்சர் எஸ். டி. சோமசுந்தரம்

"ஊழலையே ஏலத்தில் விடும் ஆட்சியிலா விசாரணையும் நடவடிக்கையும் — அருப்புக்கோட்டை மக்கள் ஆதரவு இருக்கும் வரை" —

ஒரு அரசியல்வாதியின் விமர்சனம்

இத்தகைய கீழ்த்தரமான — இழிந்த கதைகள் — உண்மைகள் பலப்பல தெரியும் தேசாய்க்கு! ஆயினும் அவர் அவற்றையெல்லாம் தெரிந்தும் தெரியாமல் — கண்டும் காணாமல் இருக்கின்றார் — அல்லது புறக்கணித்து விட்டிருக்கிறார். அதற்கும் ஓர் உள்நோக்கம் உண்டு! தனக்கும் அப்படிப்பட்ட செயல்கள் நடைபெற வேண்டியிருக்கும்; அப்போது அவற்றிற்கெல்லாம் ஆதரவு தந்திட 'அப்படிப்பட்டவர்கள் தேவைப்படுவர்என்றுதேசாய்க்குத் தெரியும்! அத்தகைய தேவைக்கும் சேவைக்கும் 'ரா' தேவைபடும் என்பதும் தேசாய்க்குத் தெரியும்.

திரு. சன்தூக் — இன்று 'ரா'வின் முழுப்பொறுப்பேற்றுள்ளவர். பிரதமர் தேசாயின் முழு நம்பிக்கைக்கும் பாத்திரமானவர்! பலகட்சிகளின் — கதம்பக் கட்சிகளின் கூட்டாக — ஒட்டு மொத்தமாகவுள்ள ஜனதா கட்சி. மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்ற முடியாமல் — நிறைவேற்றிக்காட்ட முடியாமல் கலக்கமுற்று கலகலத்த நிலையில் இருக்கிறது. பிரதமர் தேசாயை எதிர்த்து, நடைமுறைக்கோட்பாட்டுப்புரட்சி — சித்தாந்தப் புரட்சி நடைபெற்று வருகிறது. அதுமட்டுமல்ல...! நாட்டில் சட்டம் — ஒழுங்கு கெட்டு வருகிறது! இப்படிப்பட்ட நிலைமையில் பாவம்! மொரார்ஜி தேசாய் 'ரா'வை நம்பாமல் என்ன செய்வார்? அது திரும்பும் திசையில் — விரும்பும் திசையில் செல்லாமல் வேறெங்கே செல்வார்?

முன்பு 'ரா'வின் இயக்குநராக இருந்தவர் நரசிம்மன். அவர் வேலை நீக்கம் செய்யப்பட்டு, அவர் வகித்த பொறுப்பில், ஆர். என். கௌ அமர்த்தப்பெற்றார். அதன் பின்பு நடந்த திரைமறைவு நாடகங்கள் — திடுக்கிடும் கதைகள் ஏராளம்! அவற்றினை ஆய்ந்து பார்க்கும்போது முன்பு 'ரா' நடத்திய அதே திரைமறைவு நாடகங்கள் — திடுக்கிடும் மர்மக்கதைகள் — பல நாட்டின் எதிர்கால அரசியல் அரங்குகளில் மீண்டும் அரங்கேற்றம்

இருண்ட காலத்தாக் கதைகள் தொடர்கின்றன...

ஆகும் என்று எதிர்பார்க்கப் படுகிறது — அஞ்சப்படுகிறது!

"வரலாறும் போராட்டமும்" என்னும் நூலில் அதன் ஆசிரியர் 'ரோனல்ட் செகல்' என்பவர் கீழ்க்காணுமாறு குறிப்பிட்டுள்ளார்:

"ஒரு புதிய கட்சி, ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடனே, அடக்கு முறையினைக் கைக் கொள்கிறது! கட்டவிழ்த்து விடுகிறது! இத்துணைக்கும் 'அடக்கு முறையே கூடாது! அது ஒழியவேண்டும்' என்று எதிர்த்துப் போராடி — பல அடக்கு முறைகளைச் சந்தித்து வெற்றி பெற்ற அதே கட்சி!

மக்களின் சிக்கல்களைத் தீர்க்க முடியாமல் — நாட்டின் நிலைமைகளைச் சீர்திருத்திட முடியாமல் தோல்வியுறும் ஓர் ஆளுங்கட்சி தன் நிலையில் தள்ளாடி தளர்ந்துபோய் விடுகிறது. இதற்கு மற்றொரு காரணமும்உண்டு. காலச் சூழலுக்கேற்ப — வளர்ந்துவரும் கால மாறுதலுக்கேற்பகாணவேண்டிய தொலைநோக்கு இல்லாத போதும், கடந்திட வேண்டிய சாதனைத் தொலைவினை கடந்திட — அடைந்திட முடியாத போதும் ஆளும்கட்சி ஆடி ஒடுங்க வேண்டிய நிலையைத் தான் காணும். அத்தோடு ஆளுங்கட்சிக்குஎதிராக அறிவு மிகக்கொரும், எதிர்க்கட்சிகளும் விரைந்து வளர்ந்து வரும் வாய்ப்பு நாளுக்குநாள் பெருகி வருவதும கண்கூடு. இதனைக்காணும் ஆளுங்கட்சி, ஆத்திரமும் எரிச்சலும் கொண்டு அடக்குமுறைகளைக் கைக்கொள்ள நேருகிறது! ஆட்சியைப்பற்றி — ஆளுங்கட்சியைப் பற்றி எதிர்த்துப்பேசினல் மட்டுமன்றி ஆளுங்கட்சியின் நோக்கத்தை — போக்கினைப்பற்றி பேசினலும்உடனே அடக்குமுறைக் கணைகள் ஏவி விடப்படுகின்றன!"

இன்று நாட்டு நிலைமையினை நடப்பினை — நன்கு ஆய்ந்து — சிந்தித்து — சீர்தூக்கிப் பார்த்தால் 'ரோனுல்ட் செகல்' என்பவர் எழுதிய சொற்றொடர்கள் எவ்வளவு உண்மையானவை என்பது புரியும். அந்தச் சொற்களில் அடங்கியுள்ள கருத்துக்குஏற்ப தான் — திரு. தேசாய் நடக்கிறரோ என்ற ஐயப்பாடு எழுகிறது. "சமுதாயமும் — பத்திரிகையும் சுதந்திரமாக இயங்க உத்தரவாதம் உண்டு. அதற்குத்தான் நான்உறுதுணையாக இருப்பேன்" என்பது போல் தாமே வெளிப்படையாக — நாடறிய எடுத்து விளக்கியதற்கு மாறாக — எதிரிடையாக — காரியம் ஆற்றுவதிலே அக்கறை காட்டி வருகிறர் தேசாய். ஏன் இதுவரையில்லாத அளவில் 'ரா' இன்னும் திறம்பட இயங்க வேண்டும் என்று பற்பல புதிய கருவிகள் நடைங்கனும் நாட்டப்பெற்று வருகின்றன. அதன் மூலம், பிரதமர் தேசாயின் கருத்தில் மாறுபட்டவர்கள் — எதிர்க்கட்சி — அணியில் இருப்பவர்கள் மட்டும் அல்லாமல் ஜனதா கட்சிக்குள்ளே இருப்பவர்கள் பலரைக்கண்காணிக்கவும், அவர்களது வாழ்க்கை நீரோட்டங்கள் — அன்ருடச் செயல்கள் — நிகழ்ச்சிகளையெல்லாம். காலத்தின்வரைவு — புதுமைக்கேற்ற வகையில் குறிப்பு எடுத்துத் தொகுக்கப் பெற்று வருவதாக நாள் தோறும் புகார்கள் வந்த வண்ணம் இருக்கின்றன.

பத்திரிகை ஆசிரியர்கள், முந்தைய ஆட்சிக காலத்தில் கண்காணிக்கப்பட்டு வந்த நிலையே இன்னும் இருக்கிறது; நீடித்து வருகிறது என்னும் அச்சம் நிறைந்த நிலையில் இருக்கின்ருர்கள்.

இவற்றையெல்லாம் நம்பிடும் வகையிலேயே தேசாய் அவர்களின்நோக்கும் போக்கும் அமைந்துள்ளன! இத்துணைக்கும் மக்கள் ஆட்சித் தத்துவத்தில் — மக்களின் சுதந்திரத்தில் தனிமனித உரிமைகளில் பற்றும் — பிடிப்பும் கொண்டுவிளங்குபவர்தேசாய் தான் என்னும் அளவுக்குப் பேச வருபவர் அவர்! என்ருலும் தேசாயின் போக்கில் மக்கள் கொண்ட ஐயம் தொடர்ந்து நீடிக்குமானுல் — தீர்க்கப்படாமல இருக்குமானுல், 'ரா'வின் நடவடிக்கைகளில் ஒரு புதிய பரிணும வளர்ச்சிஏற்படும் அந்த புதிய பரிணும வளர்ச்சி, தேசாய் அரசின் நேர்மையை — ஒழுங்கை — விரைவில் பட்டொழியச் செய்துவிடும் என்பது உறுதி!

(தொடரும்)

நன்றி: 'PROBE'

சுந்தரத் தெலுங்கில் செந்தமிழ்

'ஸ்ரீ பூதலப்பட்ட ஸ்ரீராமுலு மரட்டி' என்பார் தெலுங்கு இலக்கிய உலகில் முதிர்ச்சி பெற்ற. குறிப்பிடத் தகுந்த காவியச் செல்வர். கற்புக்கரசி கண்ணகியின்காவியமான சிலப்பதிகாரத்தைத் தெலுங்கில் மொழி பெயர்த்தவர். திருக்குறள், கம்பராமாயணம், மணிமேகலை, பாரதி கவிதை பெரிய புராணம் முதலிய தமிழ் இலக்கியங்களை, தெலுங்கில் செய்யுள் வடிவில் மொழி பெயர்த்துத் தந்துள்ளார். மறைந்துவிட்ட இவர் தெலுங்கு மொழியில் ஓர் இலக்கிய மேதை யாவார்.

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

வ. நெ மு தாஜுதீன்
26. தெற்கு சித்திரை வீதி
மதுரை 625001

கேள்வி; 'ஐயா இருதய' விவகாரத்தில் அது அவரது இதயம் இல்லை எனத் தெரிந்தும், அது ஐயா சம்பந்தப் பட்டதாக இருப்பதால் அதை எதிர்க்காமல் தாங்கள் மௌனம் காட்டுவதாக சோ குற்றம் சாட்டுகிறாரே! அதற்குத் தங்களின் பதில் என்ன?

பதில்: 'எவர் சான்ன சொல்லானாலும் அதனை உந்தன் இயல்பான பகுத்தறிவால் எண்ணிப் பார்ப்பாய்' என்று பெரியார் கற்றுக் கொடுத்திருக்கிறாரே அதற்குப் பிறகும் இப்படி ஒரு கேள்வி எதற்காக?

●

இ வ. முனியாண்டி,
எண்: 20, அலமேலு அப்பாதுரை தெரு
ராஜி நாயக்கன் தோட்டம்,
சீதம்மா காலனி, சென்னை -18

கேள்வி: கலைஞர் அவர்களே — தாங்கள் எதிர்க் கட்சித் தலைவர் என்ற வகையில் சட்டசபையில் எம்.ஜி ஆரிடம் அடுக்கடுக்காகச் சாட்டிய குற்றங்களுக்கு எம். ஜி. ஆர். சரியான பதில் கூற முடியாமல் கருணாநிதி செல்லுகிற இடமெல்லாம் நானும் பின்னாலேயே சென்று அவருக்குப் பதில் சொல்லக கூட்டம் போட்டுப் பேசுவேன் என்று சொல்லியிருக்கிறாரே. இவருக்குப் பதில் சொல்ல வேண்டியவர் நாங்களா? நீங்களா?

பதில்: நீங்கள் தான்!

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது நான் பேசியதையும் எம் ஜி ஆர். அளித்தபதிலையும் மக்களிடம் விளக்கவேண்டிய பொறுப்பை உங்களைப் போன்றவர்கள் ஒவ்வொருவரும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

●

தொண்டி பசீர். (கழக உறுப்பினர்)
26 தெற்குச் சித்திரை வீதி
மதுரை —1

கேள்வி: அன்புத் தலைவரே!

முதல்வரின் 330 நிமிடப் பேருரையின்போது தங்களின் மன நிலை எப்படியிருந்தது?

பதில்: தெளிவாக இருந்தது!
குழப்பங்களால நான்
குழப்பமடையவில்லை!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களால் அழகிரி அச்சகத்தில் (156, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம்-600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம்: அன்பகம், 508 அண்ணாசாலை, தேனாம்பேட்டை - சென்னை-600018 தொலை பேசி: 441009

மின் இணைப்பைத் துண்டித்தால்

கழக உழவர் அணிச் செயலாளர் எச்சரிக்கை

கழக உழவர் அணிச் செயலாளர் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:—

மின் கட்டணம் கட்டவில்லை என்பதற்காக மின் இணைப்பைத் துண்டிப்பது கண்டிக்கத்தக்கது. விவசாயிகளிடம் மின் கட்டணம் செலுத்தப் போதுமான பணமில்லை. அதற்குப் பரிகாரம் காண விளை பொருட்களுக்கு கட்டுப்படியான விலை கிடைக்கச் செய்வதை விட்டு விட்டு மின் இணைப்பைத் துண்டிப்பது விவசாயிகளின் வயிற்றில் அடிப்பதைப் போலாகும். இந்தப் பிரச்சினையில் முதல்வர் சற்றும் விவேகத்துடன் நடந்து கொள்ளவில்லை

அரசு உடனடியாக இதைத் தவிர்க்கா விட்டால் தமிழகம் முழுவதும் உள்ள விவசாயிகள் கொந்தளித்தெழுந்து நேரடி நடவடிக்கையில் ஈடுபட நேரிடும்.

இந்தியா இரண்டுபட வேண்டுமா?

நாடாளுமன்றத்தில் முரசொலி மாறன் எச்சரிக்கை

இந்தியாவை 'ஹிந்தியா' ஆக்குவதற்கு நீங்கள் ஒரு ஆழமான முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறீர்கள்.

ஒரு பக்கம் நீங்கள் ஆங்கிலத்தை விரட்டியடிக்கிறீர்கள்! இன்னொரு பக்கம் நீங்கள் இந்தியை அரியாசனம் ஏற்றுகிறீர்கள்!

பீகாரைப் பாருங்கள்!

பீகார் முதலமைச்சர் மீது நான் மிகுந்த மரியாதை வைத்திருப்பவன்.

அங்குள்ள அதிகாரிகள் ஆங்கிலத்தில் குறிப்பு எழுதினால் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று அறிவித்திருக்கிறார்.

இரண்டு நாட்களுக்கு முன்பு ஆங்கில 'டெலிபிரிண்டர்கள்' முழுவதும் ஒழித்துக் கட்டப்படும் —என்றும் அறிவித்திருக்கிறார்.

— இது எங்குபோய் நிற்கும் என்று எனக்குத் தெரியவில்லை.

பீகார் போன்ற இடங்களில் இந்தி தெரியாதவர்கள் தற்குறிகளாகக் கருதப்படும காலம் விரைவில் உருவாகிவிடுமோ — என்று கருதுகிறேன். அப்படி ஒரு நிலை வரத்தான போகிறது.

ஆனால் ஒன்றை மட்டும் வலியுறுத்திச்சொல்லிக்கொள்வேன் — ஆங்கிலத்தை வெளியேற்றிய பிறகு. அந்தச்சூன்யத்தை நிரப்புவதற்கு இந்தி தானகை அந்த இடத்தைப் பிடித்துவிடும் — என்று யாராவது கருதுவார்களேயானால் அவர்கள் நிச்சயம் ஏமாந்து போவார்கள்!

அந்தமாதிரி எண்ணத்தை யாரும் வளர்த்துக் கொள்ள வேண்டாம்; அது நடக்கவே நடக்காது.

காரணம் சாதாரணமானது: ஆங்கிலத்தின் இடத்தை நிரப்பும் சக்தி இந்திக்குக் கிடையவே கிடையாது.

அப்படி ஏதாவது நடந்துவிட்டால் விரைவில் இந்தி தெரிந்த இந்தியா — 'ஆங்கிலம் தெரிந்த இந்தியா' — என இரண்டு இந்தியாக்கள் உருவாகி[illegible]ம். அதனால் இந்திய ஒற்றுமைக்கு எத்தகைய ஆபத்து ஏற்படும் என்பதை நான் சொல்லத் தேவையில்லை.

நம் நாடு
ஆசிரியர்: மு. கருணாநிதி

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 26-00
ஆறுமாத சந்தா ரூ. 13-00

ஆறு மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.